உ





# ஞானச்சுடர்

## மலர்

பங்குனி 2002




வெளியீடு

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

## குறள் வழி

" அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

பொருள்:-

தருமத்தின் பயன் இத்தன்மையதென்று நூற் பிரமாணங் கொண்டு காட்டவேண்டியதில்லை பல்லக்குச் சுமப்போனுக்கும் அதில் ஏறிச்செல் வோனுக்குமுள்ள வேற்றுமையே அதனைக் காட்டிவிடும்.



உ

## நற்சிந்தனை

### கிளிக்கண்ணி

பந்திபந்தி யாயிருந்து — கிளியே
பார்ப்பார்க ளெல்லாரும்
விந்தைசேர் மந்திரத்தைக் — கிளியே
விளம்புகின்றார் கேட்டிடடி

பச்சைப் பசுங்கிளியே — கிளியே
பார்த்தாயோ கதவுகளை
அச்சமின்றி மூடிவிட்டார் — கிளியே
அபிடேகம் ஆகுதடி.

ஏக மனதாகிக் — கிளியே
எல்லாரும் நிற்கையிலே
வேகமுடன் கதவுகளைக் — கிளியே
வேதியர்கள் திறந்துவிட்டார்

[ தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
- 2 APR 2002
யாழ்ப்பாணம்

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

பொதுசன நூலகம்
2 APR 2002
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ஓம்

# ஞானச்சுடர்

வெளியீடு – 2 சுடர் – 51

பொதுசன நூலகம்
2 APR 2002
யாழ்ப்பாணம்

2002 பங்குனி

[illegible]

பக்கம்


| | |
|---|---|
| பங்குனி உத்தரம் | 1 - 3 |
| சைவத் திருமுறைகள் | 4 - 7 |
| வழிகாட்டும் வான் பொருள் | 8 - 10 |
| உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் | 11 - 13 |
| இலவச வைத்திய சேவை | 14 - 15 |
| நித்திய அன்னப்பணி..... | 16 - 17 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும் .... | 18 - 21 |
| சக்தி வழிபாட்டின் சிறப்பு | 22 - 23 |
| இடமை புரிந்தவரேனும் | 24 - 25 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன்..... | 26 - 27 |
| உயர்திரு யோக சுவாமி | 28 - 30 |
| 21 ம் நூற்றாண்டில் சிறந்த இந்து .... | 31 - 33 |
| இன்று போல் என்றும் | - 34 |
| நாவலர் பெருமான் சிந்திய ... | 35 - 36 |
| சந்நிதியான் | 37 - 41 |


அன்பளிப்பு: சுடர் ஒன்று 30/- ரூபா
வருடச்சந்தா தபாற்செலவுடன் 365/- ரூபா
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையினர்.

அச்சுப்பதிப்பு: அச்சகம் சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர்

# மாசி மாத வெளியீடு

## வெளியீட்டுரை :-

மாசிமாத மலருக்கான வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திரு. ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் மேற்கொண்டார்கள்.

சந்நிதியான் ஆச்சிரமம், சைவ, கலை பண்பாட்டுப்பேரவை என்பன பொதுவாக ஆற்றிவருகின்ற செயற்பாடுகளை சபையின ருக்கு எடுத்துக்காட்டினார்கள்.

இந்த செயற்பாடுகள் எல்லாமே அவசியமானவை அவற்றில் ஞானச்சுடர் வெளியீடு என்பது மகத்தானது என்பதையும் குறிப் பிட்டார்கள்.

## மதிப்பீட்டுரை :-

மதிப்பீட்டுரையை ஓய்வுபெற்ற அதிபரும் சைவப்புலவருமான திரு. சு. செல்லத்துரை அவர்கள் வழங்கினார்கள். எமது சமயத் தின் நிகழ்கால நிலமைகளையும் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற குழப்பமான நிலமைகளையும் சபையிலுள்ளோருக்கு எடுத்துக்கூறி அவர்களை விழிப்படையச் செய்தார்கள்.

மேலும் சமூகத்தில் காணப்படுகின்ற சமயம் தொடர்பான குறைபாடுகளை அப்படியே எல்லோரும் பார்த்துக் கொண்டிராது அவற்றை மாற்றியமைப்பதற்கு, நல்லதை நடைமுறைப்படுத்துவ தற்கு சில அன்பர்களுடன் இணைந்து தாம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பற்றியும் எடுத்துக் கூறினார்கள்.

இந்த நிலையில் ஞானச்சுடர் என்ற சஞ்சிகை எமது சமயத் தவர்களுக்கு எமது மண்ணில் இருந்து காத்திரமான பங்களிப்பை மேற்கொண்டு வருவதையிட்டு எமது சமயத்தவர்கள் புழகாங்கிதம் அடைய வேண்டுமென்பதை எடுத்துக்கூறினார்கள்.

நாயன்மார் காலத்தில் மட்டுமன்றி நாம் வாழ்ந்து கொண்டி ருக்கின்ற காலத்திலும் அற்புதங்கள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன என்பதை ஞானச்சுடர் வெளிக்காட்டிவருவது ஞானச்சுடருக்குள்ள தனித்துவம் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள்.

மதிப்புரை என்ற வகையில் கட்டுரைகள் எல்லாவற்றையும் அடக்கமான முறையில் மதிப்பிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானக் கந்தா
# அகங்குளிர வைப்பாய்

கந்தன் எமக்கு கருணை செய்வான்
முந்தை வினைகளை முடித்து வைப்பான்
நிந்தை செய்வோரின் சினம் தணிப்பான்
எந்நாளுமவன் எம்மை எழுந்திடச் செய்வான்.

ஆறு படைகளில் அருளும் அழகன்
நீறு அணிபவரை நித்தமும் காப்பவன்
ஏறு நடைபோட எமக்கு அருள்பவன்
சேறு இல்லாத செல்வம் அளிப்பவன்.

அடியார் குறைதீர்க்க அவதரித்த அன்பன்
கொடியார் இருந்தவரின் அடுக்கை அடக்கியவன்
மிடியால் அழுபவரை மீளச் செய்பவன்
படியாய் நின்றே பரவசம் அளிப்பவன்.

அன்பின் உருவமானவரை அரவணைத்து நிற்பவன்
அன்ன தானத்தினால் அகங்குளிர வைப்பவன்
சந்நிதிப் பதியான் சாந்த குமாரனே
இந்நிதி இடையறாது இருக்கச் செய்வாய்.

ஏழை உள்ளங்களில் என்றும் நிறைபவன்
வாழையடி வாழையாக வளரச் செய்பவன்
காளைகள் கலங்காது காவல் செய்பவன்
வேழ முகத்தோனின் புனித சோதரனே.

சந்த காலமுதல் சங்கதிகள் தருபவன்
தங்கத் தமிழ்காந்த தயாள குமாரன்
பங்கம் இல்லாத பாதையை வகுத்தவன்
எங்கும் ஒளிபரப்பி எங்களைக் காப்பவன்.

— முருகதாசன்

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சுடர் தரும் தகவல்

சமயம் சமயத்திற்காக என்பதல்ல. அது வாழ்க்கைக்கானது என்பதை பலரும் சிந்திக்க தவறுகின்றனர் போல் தெரிகிறது. இந்த பொதுவான நிலை இன்று எமது சமூகத்திலும் பரவலாகக் காணப் படுகின்றது. அத்துடன் சமயத்தொண்டு செய்ய முனைப்புடன் செயற்படுபவர்களாகக் காட்டிக்கொள்கின்றவர்கள் கூட வறுமை, அறியாமை, தீராத துன்பம், தீராத நோய் போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்டிருப்பவர்களைப் பற்றி சிந்திப்பவர்களாகவோ கவலைப் படுபவர்களாகவோ தெரியவில்லை என்பதும் பலரால் சுட்டிக்காட்டப் படுகிறது.

ஆகவே எமது சமயம் சார்ந்தவர்கள் தமது ஏனைய செயற் பாடுகளைக் குறைத்து வாழ்க்கையில் நொந்து போய் உள்ளவர்கள் துன்பப்படுபவர்கள், சமய நெறிக்கும் மனிதப்பண்புக்கும் ஒவ்வாது நடக்கின்றவர்களின் நிலைபற்றிச் சிந்தித்து அவர்களுக்காக செயற் படுவதே சாலச்சிறந்ததாகும். குறிப்பிட்டுக் கூறுவதானால் தேவை யில்லாத ஆலயப்புனரமைப்பு, கேளிக்கையான திருவிழாக்கள் சில ருக்கு மட்டும் பயன்படக்கூடிய நூல் வெளியீடு, சமய நோக்கம் என்ற போர்வையில் தேவைக்கதிகமான நிதியை சேமித்தல் போன்ற செயற்பாடுகளைக் குறைத்து பிறருக்குப் பயன்படக் கூடிய தொண் டிளடிப்படையான செயற்பாடுகளை முடுக்கிவிடுவதே விரும்பத்தக்க தாகும்.

அன்பே சிவம் எனக் கூறுகின்ற எமது சமயத்தத்துவத்தினடிப் படையில் மற்றவர்கள் மேல் அன்பு பூண்டு அவர்களுக்காக எமது சமயம் தொடர்பான அனைத்து வளங்களையும் பயன்படுத்த வேண்டு மென்பதே காலத்தின் தேவையாக நோக்கப்படுகிறது.

நல்லை ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப் பரமாச்சாரிய சுவாமிகளுடன் எமது சமயம் தொடர் பான பொதுவான கருத்துப்பரிமாற்றம் ஒன்றில் ஈடுபடும் பொழுது சுவாமிகளும் இந்தக்கருத்தை வலியுறுத்தியதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். நல்லதைச்செய்து நல்லபயனைப் பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு சி. கிருஷ்ணபிள்ளை J. P.
( ஆவரங்கால் )

உரிமையாளர்
( சபா ஸ்ரோர்ஸ், அச்சுவேலி )

பொதுமுகாமையாளர்
( வலிகிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலி )

பொதுமுகாமையாளர்
( பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி )

திரு கி. சந்திரலிங்கம் J. P.
( பதிவாளர் மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை )

திரு செ. க. செல்வநாயகம்
( '' செல்வா ஸ்ரோர்ஸ் '' ஆவரங்கால் )

திரு க. இராசதுரை
( கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால் )

திரு கந்தையா வைத்தியநாதன்
( கிராம உத்தியோகத்தர், புத்தூர் கிழக்கு )

திரு சி. ஆறுமுகானந்தன்
( கிளை மேற்பார்வையாளர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திருமதி கனகமணி இரத்தினம்
( ஆயன்னா வீதி அம்பனை; சுன்னாகம் )

சோமசுந்தரம் செல்வக்குமார்
( சன்சில்க் ஹெயர்லைன் சென்ரர் G. P. S. றோட் கல்வியங்காடு )

திரு இ. சொக்கலிங்கம் இளைப்பாறிய ஆசிரியர்
( நாவற்குழி )

உரிமையாளர்
( புதிய சுகானந்தா தட்டாதெருச் சந்தி யாழ்ப்பாணம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு கி. இராஜதுரை ஆசிரியர்
( வீ. மகா வி. தொண்டைமானாறு. )

உரிமையாளர்
( சுபாஸ் வெதுப்பகம் நெல்லியடி )

திரு ஜீ. ஜெயப்பிரகாஸ்
( ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி )

திரு சி. கணபதிப்பிள்ளை
( முன்னாள் தலைவர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம். )

திரு ந. விஜயகுமார் ஆசிரியர்
( ஹாட்லிக் கல்லூரி )

திரு S. ஜீகணேஸ்
( இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர் )

அதிபர்
( மத்திய கல்லூரி - யாழ்ப்பாணம் )

உரிமையாளர்
( அம்பாள் ஸ்ரோர்ஸ், வல்லை வீதி - சங்கானை )

திரு கு. செல்வரெத்தினம்
(ஸ்ரீநிக்ஷன், பல்பொருள் வாணிபம் - அச்சுவேலி )

திரு வை. துரைராசா
( ஒஸ்கா வீதி, - உரும்பிராய் தெற்கு )

திரு ந. நவரெட்ணம்
( மகேஸ்வரி வாசா - ஆனைக்கோட்டை )

திரு சி. வெற்றிவேலாயுதம்
( இயக்குனர் வலம்புரி )

திரு S. விமலராஜா
( தேவாலய வீதி - சங்கானை )

உரிமையாளர்
( புதிய நகுலா நகை மாளிகை, கஸ்தூரியார் வீதி, - யாழ்ப்பாணம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பங்குனி உத்தரம்

க. சிவசங்கரநாதன்



சூரியன் மீனராசியிற் சஞ்சரிக்கும் காலம் பங்குனி மாதம். சந்திரன், கன்னிராசியிலே உத்தர நட்சத்திரத்துடன் சேர்ந்து பங்குனி மாதத்தில் வரும் நன்னாளே பங்குனி உத்தரத்திருநாள். இத்தினத்தில் பார்வதி சமேதராகப் பரமேஸ்வரனைத் திருமணக்கோலத்தில் தியானித்து விரதம் அனுஷ்டிக்கப்படும் புண்ணிய நாள். இவ்விரதம் திருமண விரதம் எனவும் கல்யாணசுந்தர விரதம் எனவும் போற்றப்படுகிறது. இவ்விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் பகல் முழுவதும் உணவு உட்கொள்ளாமல் இருந்து இரவிலே பாலன்னமும் பழமும் உட்கொள்வர். நம் நாட்டிலுள்ள சிவஸ்தலங்களில் திருக்கல்யாணப் பெருவிழா பங்குனி உத்தரத்தன்று நடாத்தப்படுகிறது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், ஈழத்துச்சிதம்பரம் (காரைநகர்) ஆகிய தலங்களில் இவ்வுற்சவம் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது. கடந்த பன்னிரண்டு வருட காலமாகத் திருக்கேதீஸ்வரம் பூசையின்றி இருப்பதால் நடைபெறுவதில்லை. ஆனால் அடுத்தவருடம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கலாம். பங்குனி உத்தரத்தை இறுதிநாளாகக் கொண்டு சிவாலயங்களில் கொடியேற்றத்துடன் மகோற்சவம் நடைபெறுகின்ற வழக்கமும் உண்டு. கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம், திருக்கோணமலை பத்திரகாளியம்மன் ஆலயம் ஆகியவற்றில் இக்காலத்தில் மகோற்சவங்கள் நடைபெறுகின்றன. மதுரையில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் நிகழ்த்தப்படுகிறது.

பங்குனி உத்தரத்தன்று இறைவன் சந்நிதியில் எத்தனையோ திருமணங்கள் நிகழ்கின்றன. இத்தினத்தில் வேறு நாள் கோள் முகூர்த்தங்கள் பார்ப்பது இல்லை. நம்பிக்கை மக்களை வாழவைக்கின்றது. நம்பிக்கையின் அளவு ஏற்படும்போது தெய்வம் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையிலும் தளர்ச்சி ஏற்படுவதைக் காண்கின்றோம். இதுவே உண்மை நிலை இளைஞர்களும் கன்னியர்களும் இத்தினத்தில் விரதம் அனுட்டித்து வழிபாடு செய்தால் அவர்களுக்குத் திருமணம் விரைவில் நிறைவேறும். வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈபவன் இறைவன். தேவர்களும் தெய்வ நிலையில் உள்ளவர்களும் தேவ தேவியரை வழிபட்டு இத்தினத்தில் விரதம் அனுட்டித்து வேண்டும் வரங்களைப் பெற்றுள்ளனர் திருமகள் மகாவிஷ்ணுவின் திருமார்பில் வீற்றிருக்கும் பேற்றினைப் பெற்றாள் இந்திரன் இந்திராணியை அடைந்ததும், பிரமன் சரஸ்வதியை நாவினிடமாகப் பெற்றதும் இவ் விரதத்தின் மகிமையால் என்று புராணங்கள் கூறுகின்றன.

சிவநேசர் என்பவர் திருமயிலாப்பூரில் வாழ்ந்து வந்த சிவபக்தர் அவரது புதல்வி பூம்பாவை திருஞானசம்பந்தருக்கு உரியவள் என்று எண்ணியிருந்த காலத்தில் பூம்பாவை பூக்கொய்ய நந்தவனம் சென்ற பொழுது அரவம் தீண்டி இறந்துவிட்டாள் அவளின் உடலைத் தகனஞ் செய்து பெற்ற சாம்பரையும் எலும்பையும் பொற் குடத்திலிட்டு வைத்திருந்தார் சிவநேசர். திருஞானசம்பந்தரும் அவர் எதிர்பார்த்தபடி அவ்வூருக்கு வருகை தந்தார். அற்றை நாள் மயிலாப்பூர் கபாலீச் சுரருக்கு ஒன்பதாம் திருவிழா, அது பங்குனி உத்தரத் திருநாள் பொற் குடம் அங்கு தருவிக்கப்பட்டது.

" மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல் செய் பங்குனியுத்தரநாள்
ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய்

என்று தொடங்கும் திருப்பதிகத்தைத் திருஞானசம்பந்தர் பாடினார். பூம்பாவையும் உயிர் பெற்றெழுந்தாள் சம்பந்தர் காலத்திலும் பங்குனி உத்தர விழா சிறப்புற்று விளங்கியமை தெளிவாகிறது ஒருமுறை ஈசனை நோக்கிப் போகமும் யோகமும் எதிரும் புதிரும் இல்லாமல் ஒன்றிய நிலையில் இருப்பது எப்படி? என்று உமையவள் கேட்டாள் அதற்கு ஈசன் உலகங்கள் யாவும் படைத்தவனாகிய என்னைப் பின் பற்றி நான் காட்டிய பாதையில் நடக்கின்றன. அஞ்ஞானத்தாற் பீடிக்கப்பட்டுள்ள மக்களுக்கு யோக நிலையையும். போக நிலையையும் கற்பிக்க நானே அவற்றை முன்மாதிரியாகச் செய்து காட்ட வேண்டியுள்ளது. இவர்கள் போகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள நான் முன்மாதிரியாக உன்னை மணந்து போகியாகக் காட்சியளிக்கின்றேன். யோகசித்தி பெற்று மெய்ஞ்ஞான நிட்டைகூடி முத்தியை மக்கள் பெற்றுக் கொள்ள யோகியாகவும் நடந்து

○ மனிதனுடைய பேச்சே அவன் எண்ணத்தை வெளிப்படுத்தும். ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகிறேன் என்றார் ஈசன். அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பது தொனியாகின்றது பார்வதி சமேத பரமேஸ்வரன் பங்குனி உத்தரத்திலைக்கன்று போக நாடகம் ஆடுவது மார்க்கத்துக்குப் போக ஞானத்தை வாழ்வியல் நெறியை உணர்த்துவதற்காகத்தான் போலும் அதேவேளை யோகமுடையானாகவும் ஆத்மீக அடிப்படைக் கொள்ள லாம் போகமும் யோகமும் எதிர்ப்புதிரும் அல்ல உலகியலும் ஆத்மீகமும் ஒன்றுக்கொன்று முரணானவையல்ல இரண்டும் இணைந்தவை இணையக் காட்டுவதை அறியாமையினால் மக்கள் வேறுவிதமாக இவற்றை நோக்குகிறார்கள். ஈசன் இரண்டுமாய் இருக்கின்றான். இரண்டாகவும் இருக்கின்றான் என்பது இதன் தாத்பரியம். மனித வாழ்க்கை உற்பத்தி மூலத்திலிருந்து இணைப்பிலேயே நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. அருமை வள்ளலாக இறையும் இறைவியும் நிகழ்வுற இணைந்து நிற்கும் சிவசக்தி தத்துவத்தின் காட்சி விளக்கமாகப் பங்குனி உத்தரத்திருக்கல்யாணம் பெருவிழா துலங்குகிறது மேற்படி நன்னாளில் அம்மையப்பனைப் போற்றி வழிபடுவோமாக.

## "சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும்"

கைலாசபதியத்தில் தாத்பரியங்களை எடுத்தியம்பும் ஞானச் சுடரை அலங்கரித்துவரும், கருத்தாளர்கள், கட்டுரையாளர்கள், கவிஞர்கள், மற்றும் வெளியீட்டு நிகழ்வின் விருந்தினர்கள், கலைஞர்கள், மாணவர்களும் 27 - 01 - 2002 ஞாயிறன்று கௌரவித்து வெற்றிகொண்ட மாட்சி பேரிறைவ மறுபடி நிகழாத ஒரு காட்சியாகும். இந்த சந்நிதியிறைவனின் திருவருட்கடாட்சமாகும் காத்திரமான, ஒரு தொடரான பணியினை ஞானச்சுடர் மேற்கொண்டுவருவது சைவத் தமிழுக்கு வாய்த்ததாம் இன்பம் பயப்பதாகும். சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும், இனி எதிர்காலத்தின் சிறப்பும் ஞானச்சுடருக்கு நிரம்ப உண்டு.

/ கே. எஸ். சிவஞானராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ [தொடர்ச்சி.....

# சைவத்திருமுறைகள்

ஆய்வாளர் கனக. நாகேஸ்வரன் M. A

## திருமுறைகள் ஓதும்முறை:-

திருமுறைகளை வரிசைக் கிரமமாக ஓதுதல்வேண்டும் என்பது விதி. ஒன்றையாவது தவிர்ப்பது குற்றமாம். இன்று, பன்னிரு திருமுறைகளையும் பஞ்சதோத்திரம் என்று சுருக்கிவிட்டார்கள். பஞ்சதோத்திரம் என்பது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்பனவாம். இவற்றைப் பாடிய பின்னர் திருப்புகழ் மற்றும் அடியார்கள் திருப்பாடல்கள் கோயிலிற் பாடப்படுகின்றன. தேவாரம் பாடும்போது முதலில், 1 ஆம் 2 ஆம் 3 ஆம் திருமுறைகளிலிருந்தும் (சம்பந்தர்) அடுத்து, 4 ஆம் 5 ஆம் 6 ஆம் திருமுறைகள் (திருநாவுக்கரசர்) பின்னர், (7 ஆம் திருமுறையுமாகப் (சுந்தரரது) பாடல் வேண்டும். முறைமாறிப்பாடுவது தவறாகக் கணிக்கப்படுகிறது. எனினும், இன்று 'திருத்தாண்டகம்' என்னும் அப்பர் சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட பதிகங்களே திருமுறையில் முதற்கண் ஓதும் வழக்கமுண்டு. இது தொடர்பிலே ஆதீன சம்பிரதாயமும், ஆலய சம்பிரதாயங்களும், ஓதுவார் சம்பிரதாயங்களும், ஆய்வாளர் சம்பிரதாயமும் உண்டு. இதுதொடர்பான தெளிவினை இனிமேல் வரும் 'சைவ மகாநாடுகள்' மேற்கொள்ளின் பெரும் பயனுண்டு. கலகமும் குழப்பமும் தவிர்க்க ஏதுவாகும்.

திருமுறைகளைப் பாடும்போது, குற்றங்கள் நீக்கியே பாடுதல் வேண்டும். குற்றங்களாவன பண்குற்றம், எழுத்துப்பிழை, சொற்பிழை, பொருட்பிழை, நாசியாற்பாடுதல், வாயைக் குகைபோலத் திறத்தல், வாய் கோணுதல், அழுமுகங் காட்டுதல், கண்கள் ஆடுதல், தலை நடுங்குதல், புருவமேறுதல், மிடறு வீங்குதல் முதலியனவாகும்.

திருமுறைகளைப் பண்ணோடு பாடும் சிறப்பைப் பற்றித் திருஞானசம்பந்தர் பல இடங்களிற் கூறியுள்ளார்.

மனிதர்களில் அறிவுக்கண் உள்ளவனே சிறந்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாதன் வேதியன் ஞானசம்பந்தன் வாய் நவின்றெழு தமிழ்மாலை
ஆதரித்திசை கற்றுவல்லார் சொலக் கேட்டுகந்தவர் தம்மை
வாதியாவினை மறுமைக்கு மில்லையாகும் வருந்தும் வந்தடையாவே"

"பண்ணியல் பாடவல்லார்கள் என்றும் பழியொடு பாவமிலரே"
"பண்களாற் றரப்பாடுவார் பழியிலர், புகழாமே."
"பண்ணாருந் தமிழ் வல்லார் பரலோகத்திருப்பரே."

இவை பண்பாடுதலின் இன்பமான பலனைக் குறிக்கின்றன. இவற்றைச் சைவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

பக்தி இலக்கியங்களான சைவத் திருமுறைகள் மக்களைப் பாடாது, பரம்பொருளான இறைவனான சிவனைப் பாடுகின்றன. இறைவனைப் பாடுவது என்னும் போது, திருக்கோவில்களைப் பாடுவது என்பது பொருளன்று; இறை அநுபவத்தைப் பாடுவது என்பதுதான் பொருள்.

தெய்வ அநுபவமுள்ளவர்கள் முதலில் ஞானியர்.
திருமுறைகளை விளக்கும் சபாபதிநாவலர்,

"திருமுறை இலக்கியங்கள் இசைநாதமயமான திவ்விய
அருள்நூற் றன்மையும், மற்றைக் கவிப்புலவர்கள்
பாடிய பாட்டுக்கள் மாயாநூற் றன்மையுமுடையனவாதலின்
சிறிதும் தம்முள் ஒவ்வா, மாணிக்கமும்
செங்கல்லும் போல்வன அவை என விளக்குவர்." 3
என்று குறிப்பிடுகின்றார்.

பக்தி இலக்கியத்தைத் தோற்றுவித்து நடாத்தியவர் என்று கருதப்படும் ஆளுடையபிள்ளையார் சிவஞானமாம் ஞானப்பால் உண்டு "ஞானசம்பந்தர்" என்று பெயர்பெற்றவர். சிவன் ஞானப் பால் ஊட்டுமாறு தான் நேரடியாக வேண்ட, தேவியோ "சிவ ஞானத்து இன்னமுதம் அருள" அவ்வமையே தெளிந்த ஞானம் பெற்றுவிடுகிறது. ஞானசம்பந்தர் பெற்றது எத்தகையது என்பதனை,

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்" 4
என்று சேக்கிழார் பாடுவர்.

கடவுளைச் சிந்திக்க காலத்தை நோக்க வேண்டியதில்லை.

தேவியால் திருமுலைப்பால் ஊட்டப்பெற்று ஞானசம்பந்தம் பெற்ற ஆளுடையபிள்ளையார் கலைநின்ற நெறியே பக்திநெறி. சம்பந்தர் திருக்கோவில்கள் தோறும் சென்று தொழுது இறைவனை ஏத்திப்பாடியவர். இறைவனைத் தொழுதுய்வதற்கு ஞானம் வேண்டும் என்று பாடுகின்றார்.

'ஊனமிலராகி உயர்நற்றவ மெய்கற்றவை உணர்ந்த அடியார்
ஞானம் மிகநின்று தொழநாளும் அருள்செய்யவல்ல நாதனிடமாம். 5
'முன்னைவினைபோய வகையினால் முழுதுணர்ந்து முயல்கின்ற முனிவர்
மன்னவிருபோதும் மருவித்தொழுது சேரும் வயல் வைகாவிலே '' 6

அடியார்கள் ஞானம் மிக அதன் விளைவாக நின்று தொழுகின்றனர் முழுதுணர்ந்து முயல்கின்ற முனிவரும் தொழுகின்றனர். இங்குத் தொழுதல் இறைவன் திருமுன்னர் ஒடுங்கி நிற்றலே. மேலும் இவ்வாறு கூறும்போதும், ஞானியரும் முனிவரும் பக்தி நெறியிலே நின்று திருக்கோவில் வழிபாட்டில் திளைப்பதையே பாடுகிறாராதல் வேண்டும்.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் மூவரையும் ''தேவார முதலிகள்'' என்னும் வழக்குச் சைவ உலகிலுண்டு. இம் மூவரும் பாடியன தேவாரம் என்று வழங்கப்படுகின்றன. ஞானப்பால் ஊட்டப்பெற்ற வரலாற்றினை ஞானசம்பந்தரே பின்வருமாறு தமது தேவாரத்திற் பாடியுள்ளார்.

''போதையார் பொற் கிண்ணத்தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானென ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாளவளொடும் பெருந்தகை யிருந்ததே'' 7 —எனப்பாடுவார்.

குழந்தையாகவிருந்தபோதே சம்பந்தருக்குத் தெய்வ தரிசனம் கிடைக்கிறது. சேக்கிழார் சுவாமிகள் பாடிய சம்பந்தர் வரலாற்றிலும் இவ்வுண்மை தெளிவாக உணர்த்தப்படுகின்றது. அத் தெய்வ தரிசனத்தால் கவரப்பட்டு அத் தரிசனத்தில் தம்மை இழக்கிறார். தேவார முதற் பாடலே இவ்வனுபவத்தைப் பாடுவதே.

''தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடிபூசி என்னுள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.'' 8

○ தூய்மையானவனே கடவுளை மிகவும் நெருங்குகிறான் ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தேவாரத்தொடர்பான கதை மரபும் மிக்க பிரசித்தி பெற்றதொன்றாகும். தோணிபுரத்தீசன் உமையோடும் விடையேறி ஞானப்பாலூட்டியதும், பின்னர் சிவபாதவிருதயர் குளக்கரையிலேயே நீராடிக் குளித்துவிட்டுக் கரையேறிக் குழந்தையின் வாயில் பால் வடிந்திருக்கக் கண்டு, ''யார் இது செய்தது'' என்று வினவிய வினாவுக்குப் பதில் கூறுவது போன்று அமைந்த பாட்டு இது. சிவ சொரூபத்தை ஞான வட்டத்தில் நின்று பாடுகிறார்.

சம்பந்தர் கண்ட தரிசனம் எத்தகையது? செவியில் தோடு, தலையில் வெண்மதி, உடம்பெல்லாம் வெண்ணீறு; இவற்றோடு, விடையேறித் தரிசனம் தருகிறான் இறைவன். ''காடுடைய சுடலைப்பொடி பூசி என்னுள்ளம் கவர்கள்வன்'' எனத் திருநீற்றுப் பூச்சில், சுடுகாட்டுச் சாம்பற் பூச்சில் தம்மை இழக்கிறார் சம்பந்தர். சங்கார காரணராக இறைவனைத் தரிசிக்கும் ஞான பக்குவத்தைக் குழந்தைப் பருவத்திலேயே பெற்றுவிடுகிறார் என்றுதான் கூறவேண்டும். 9 — என்பர் டாக்டர் ப. அருணாசலம்.

திருக்கோயில்கள் பலவற்றிலும் இத்தத்துவ வடிவங்களையே தரிசிக்கிறார். திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனிகளைச் சிவன் ஆகவே கண்டு தொழுகிறார். வெவ்வேறு உயிர்கள் உய்யத் திருவிளையாடல்கள் பலவற்றையும் புரிந்த அருளாளனாகக் கண்டு தொழுகிறார். அவன் அருட்செயல்களும் அருட்டிருமேனியும் சம்பந்தரைக் கவர்கின்றன. குழந்தை சம்பந்தர் அத் திருக்கோயில்களில் தம்மை மறக்கிறார். பக்திக்காதல் மேலிடுகின்றது. திருக்கோயில்களில் சூழவிருந்த இயற்கைக் காட்சியில் தெய்வ ஒளி ஊடுருவி நிற்பக்கண்டு கிளர்ச்சியுறுகின்றார். சிவன் அருட்செயல்கள், அவன் அருட்டிருமேனி, அவன் ஒளி பரவிநிற்கும் இயற்கைக் காட்சிகள் இவற்றில் தோய்ந்து பெற்ற அனுபவ வெளிப்பாடே, சம்பந்தர் பாடல்கள், பிறிதொரு வகையாகக் கூறுவதென்றால், இயற்கைக் காட்சிகளில் தோய்ந்தெழுந்த அழகனுபவம். இறைவன் அருட் செயல்களிலும் அருட்டிருமேனியிலும் கொண்ட காதலனுபவம். இறைவன் திருக்கோயில்களையே சிவன் எனக் கண்டு தெளிந்த ஞான அனுபவம் ஆகிய இம் மூன்று அனுபவங்களையும் கொண்டு விளங்கும் அழகுக் கவிதைகளை, காதற்கவிதைகளை, ஞானப் பாடல்களைச் சம்பந்தர் பாடினார் எனல் வேண்டும். 10

[ வளரும் ... ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



திருவாசகம்

ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின்

98 - வது

ஜனன தின நினைவாக

(இக்கட்டுரை வெளியாகின்றது)

# வழிகாட்டும் வான் பொருள்

> வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் <

உண்டு உடுத்து உறங்கிக் கழிவது தான் வாழ்க்கை என்று இந்த மண்ணிற் பிறந்த பெரும்பாலோர் நினைக்கின்றோம். அந்தநினைப்பை மாற்றிப் பிறவிப்பயன் இறைவனின் திருவடி நீழல் சேருவதே என்று உணர்த்தி நிற்பன திருமுறைகள். திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி பதினொன்றாகத் தொகுத்தருளினார். ஏன் அவ்வாறு தொகுத்தார்? காரணம் சைவசாத்திரத்திலே மந்திரங்கள் பதினொன்று தான். அதற்கு மேல்இல்லை. மந்திர சாரமாக விளங்கும் திருமுறைகளையும் பதினொன்றாகத் தொகுத்தார்கள். பஞ்சப் பிரம்ம மந்திரங்கள் ஐந்து அவையாவன 1. ஓம் ஈசானாய நம; 2. ஓம் தத்புருஷாய நம; 3. ஓம் அகோராய நம; 4. ஓம் வாமதேவாய நம; 5. ஓம் சத்யோஜாதாய நம; இவைஐந்தும் பஞ்சப்ரும்ம மந்திரங்கள். 6. ஓம் ஹ்ருதயாய நம 7. ஓம் சிரசே நம; 8. ஓம் சிகாயை நம; 9. ஓம் கவசாய நம; 10. ஓம்நேத்ரேப்யோ நம; 11. ஓம்அஸ்த்ராய நம; இவை ஆறும் ஷடங்க மந்திரங்கள். பஞ்சப்ரும்ம மந்திரங்கள் ஐந்தும், ஷடங்க மந்திரங்கள் ஆறுமாகப்பதினொரு சம்மிதா மந்திரங்கள் திருமுறைகளும் பதினொன்றாக வகுக்கப்பட்டுள்ளன.

திருவாசகம் எட்டாம் திருமுறை. அதுவே சிகாமந்திரம், தலையாயது. தெள்ளு தமிழ்ச் சொல்லெடுத்து வான்மறைகளை உள்ள

அனைத்திலும் நல்ல மருந்து நம்பிக்கையேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்கி, பொருளாளரும் பெரும் கொடையாளருமாகப் பெருக்காய் இருவார்கள்.

"செழுமை மலர்ச்சடைக் கெழ்வகிழமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்பர்,
பாவெனப் பகலும் பாட்டுப்
பூவைப் பறித்துச் சொரிவாருடியே.

கண்சுமந்த நெற்றிக் கடவுள் மணிவாசகருக்காக மண்சுமந் தார். ஆறுமுகத் திருமுடியார் அடிக்கப்பட்டு நிலத் துடைத்தது. விண்ணரசு புகழுடையார் பண்டைமாத பா ருக்காகத் தன் திருமேனி யிற் புண்பட்டார்.

மணிவாசகரின் திருவாசகம் நெஞ்சை உருக்கு இலக்கியம். ஞானத் தேனுக்கு முதலிடம். பக்தர்களுக்குப் புராணம். தொண்டர்களுக்குத் தெவிட்டாத தெள்ளமுது. இந்தத் தெள்ளமுதாம் தேனையாற்றித் திருவாசகமாகிய தேன் அருள் திரு. சபாரத்தினம் சுவாமி கள் பருகிப் பணிந்து அடியவர். மெய்ச்சாத்திரங்களை பால் முழுகிய பேரன்பு கொண்டவர். திருவாசகப் பாடல்களைக் கேட்டுக் கேட்டு நெக்குருகிக் கண்ணீர் பெருக்குவார். திருவாசகத்தின் ஆழத்திற்குச் சென்று அற்புதமான ஆணிமுத்துக்களை எடுத்து அடியவர்களுக்கு அளிப்பார். கறந்த பால் கன்னலொடு தேன் கலந்தாற் போலச் சிறந் தடியார் சிந்தையுள் தேனூறும் கருத்துக்களை வாரி வழங்கியவர் பொழிபவர்.

திருவாசக சுவாமிகளாம் சபாரத்தின சுவாமிகள் 28-03-1901ம் ஆண்டு பங்குனித் திங்கள் திருவாதிரை நன்னாளில் அல்வாயைச் சேர்ந்த செல்லத்தம்பி என்பவருக்கும் பொன்னம்மா தாய்க்கும் இன்னத் தங்கத்திருமகனாகத் தோன்றினார். இளமையிலேயே சிவயோக சுவாமிகள் அருட் பார்வை பதியப் பெற்றுப் பக்குவான் மாவாக பூட்டப் பெற்றார். சித்து காலம் ஆசிரியப்பணிபுரிந்து பின்னர் அருட்டாகத் தனையாட்கச் சிதம்பரம் சென்றார். பல்வேறு தலங்களுக்கு யாத்திரை செய்தார்.

பின்னர் இணுவைக் திருக்கேதீச்சரத்தில் திருமடம் அமைத்து அடியவர்களின் பசியையும் அறியாமையையும் நீக்கும் தொண்டு புரிந் தார். ஓது பருகிக் காரணர்க்கு வண்ணம் பொருளானார்.

பொறுமையாய் இருத்தல் நல்ல அணிகலன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இறுதி நாட்களை யாழ்ப்பாணத்திற் கழித்தார். சர்க்கரைப்பந்தலில் தேன்மாரியென எந்நேரமும் திருவாசக மழை பொழிந்து கொண்டேயிருக்கும். சுவாமிகள் 25 - 01 - 1988ல் அச்சுவினித் திருநாளில் வழிகாட்டும் வான்பொருளான திருவாசகத்துடன் இரண்டறக் கலந்தார். அவரது புனித அஸ்தி அடங்கிய நினைவாலயம் அடியார்களால் மறவன் புலவில் நிறுவிப் போற்றப்படுகின்றது.

ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர்சபை ஆண்டு தோறும் குருபூசை விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடிவருகின்றது.

வாழ்க சுவாமிகளின் திருநாமம்
வளர்க அடியார் திருக்கூட்டம்.

வாழ்க்கையில் அபாயங்கள் ஏற்பட இருக்கும் போது விவரிக்க முடியாத ஏதோ சில உணர்ச்சிகள் முன்னெச்சரிக்கை செய்கின்றன. இயற்கை அளிக்கும் இந்தப் பாதுகாப்பு எல்லா ஜீவராசிகளுக்கும் உண்டு. பெருமழை தொடங்கும் முன்பே காட்டு விலங்குகள் அதை அறிந்து குகைகளை நாடி ஓடி மறைவதும், பட்சி இனங்கள் கூடுகளில் அடைவதும் இதற்கு அத்தாட்சி. இவை எல்லாம் இறைவன் அளித்துள்ள எச்சரிக்கை உணர்ச்சிகளுக்குச் சான்றாக விளங்குகின்றன. இந்த எச்சரிக்கை உணர்ச்சியை மனிதர்களாகிய எமக்கு இறைவன் அளித்துள்ளான். விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழப் போவதற்கு முன்பாகவே மனம் சலிக்கின்றது. தூக்கம் சரியாக வராமல் புரளுகின்றோம். ஏதோ திக் திக்கென்று உள்ளத்தை அடித்துக் கொள்கிறது காரணம் தெரியாமல் விழிக்கின்றோம். மனிதர்களாகிய எமக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் இதில் ஒரு வித்தியாசமென்னவென்றால் மற்றஜீவராசிகள் இறைவன் அளித்துள்ள எச்சரிக்கை உணர்வினை மதித்து நடக்கின்றன. ஆனால் நாம் எமக்குள் உள்ள ஆணவம், இறுமாப்பு காரணமாக எமக்கு எல்லாம் தெரியும் என்ற நிலைப்பாடு காரணமாக இந்த எச்சரிக்கை உணர்வினை உதாசீனம் செய்வதன் மூலம் துன்பத்தை அனுபவிக்கின்றோம்.

கொள்கையைக் கைவிடாதவன் நேர்மையாளன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௧.

சிவமயம்

# "உன்னுடைய திருவைப்பதனை நாடுகின்ற நேரம்......"

~ கே. எஸ். சிவஞானராசா ~

இறைவா! மண்ணிலே வந்துதித்த எமக்கு வாய்த்தவை இன்பம் பயக்கவல்லதாகும். உன்னு கிருபையினால் யாவும் நல்லபடியாக நடந்தேறுகின்றன. 1894-ஆம் ஆண்டிலே 'ஸ்கந்த' எனும் நாமத்தோடு ஸ்கந்தவரோதயக் கல்லூரி, பெருந்தகை கந்தையா வள்ளலினால், 'மருதடிப் பாடசாலை' எழுப்பப்பெற்றது. அன்று முதல் இன்றுவரை 108 வருடங்களாக ஸ்கந்த நாமத்தால் ஸ்கந்த மந்திரம் தன்னகத்தே போற்றப்பட்டு வருகிறது. கல்லூரி மாடத்தின் ஒரு பகுதி மையத்தில் புனித இடமாகக் கருதிய பெருமையால், ஆனாலின் பல வெற்றிநாயகர்களை இன்றும் கண்டு வருகின்றோம். இத்தனைவரை கடமையாற்றிய, ஆற்றிவரும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் யாவரும் ஸ்கந்தவரோதயாவுக்குப் புகழினையும், மகிமையையும் சேர்த்துக் கல்வியில் வல்ல பேற்றினை அளித்துள்ளார்கள். அதிபராக அமரர் V. மயில்வாகனம் அவர்களும், பிரம்மஸ்ரீ K. வைகுந்தநாதக் குருக்கள் அவர்களும் பிரம்மஸ்ரீ [illegible] நாதக் குருக்கள் அவர்களும், வித்துவான் [illegible] அவர்களும், முன்னாள் பிரதி அதிபர் திரு. K. [illegible] அவர்களும் வழிபாட்டை வழிவழியாகத் தொடர்ந்து [illegible] செய்துள்ளார்கள்.

காலத்தின் தேவையினை உணர்ந்து பெருமைமிகு ஸ்கந்தா வரோதய மாணவர் சமூகத்தினர் தற்போதைய கல்லூரி முதல்வர் திரு. கந்தசாமி [illegible] தலைமையிலான நிர்வாகத்தில் அந்த நம்பிக்கை வைத்து பெருந்தகை திரு. ஆறுமுகம் திருநாவுக்கரசு அவர்களை ஸ்கந்தாவின் பிரதிநிதியாக வழிகாட்டக் கிடைத்ததை [illegible], 2001 [illegible] ஸ்கந்தன் திருக்கோவிலுக்கான அடிக்கல் அதிபர் தலைமையில் [illegible] மாணவர் முதல் [illegible] இருக்க, தெய்வீக நாளும் [illegible] [illegible].

கொழும்பு பழைய மாணவர் சங்கம் ஆலயம் கட்டுவதற்குரிய சகல செலவுகளையும் பொறுப்பேற்றதனால், தம்பணியினை முழுதாக அர்ப்பணிக்கக்கூடிய விசுவாசி ஒருவரை ஸ்கந்தப் பெருமான் விரும்பினதாலோ என்னவோ பொறியியலாளர் உயர் திரு மதியாபரணம் பொன்னம்பலம் திருவருட்செல்வம் என்பவர் ஆலய நிர்மாணப் பொறுப்பினை மனதார ஏற்றுக்கொண்டார். யாவும் அவன் செயல். ஆலயம் உருவநிலை பெற்றது. முருகன் திருமுருகனுக்குள் இருந்தபடியினால், ஆன்மீகப் பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திருமுருகன் அவர்கள் தெய்வீக சம்பத்துக்களை எல்லாம் வேண்டிய இடத்தில், வேண்டியவாறு வேண்டுபவர்க்கு, வேண்டிய முறையில் அளித்திடுவார். அந்நிலை இங்கேயும் தரப்பட்டது. கடந்த (17 - 03 - 2002) கும்பாபிஷேகம். பாலமுருகன் மூல மூர்த்தியாக அருள்பாலிக்க, விநாயகரும், இராஜ இராஜேஸ்வரியும் வாசலின் இருமருங்கும் கொலுவிருக்க, ஸ்கந்தன் திருக்கோவில் தெய்வீக நாமங்களாற் பேரொளி பெறுகின்றது.

அருட்கவி திரு. சீ. விநாசித்தம்பி ஐயா அவர்களும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களும், சிவத்தமிழ்ச்செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும், இயலிசைவாரிதி பிரம்மஸ்ரீ வீரமணி ஐயா அவர்களும், முன்னாள், வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. சி. சிவசரவணபவன் ஐயா அவர்களும் ஆசிகள்வழங்கி வாழ்த்திய பேறும் எமக்கு மகிழ்வைத் தருகிறது.

கொழும்பு பழைய மாணவர் சங்கம் தனது முத்திரையை, வரலாற்றுக் காணிக்கையாக எமக்களித்துள்ளது. ஸ்கந்தா சமூகம் இந்தப் பேருபகாரத்தினை மிகுந்த பயபக்தியோடு தொடர்ந்து பேணிவரும் என்பது திண்ணமே.

ஸ்கந்தா இந்துமாமன்றம் தனது தொண்டின்மூலம் ஆலயத்தினை அவதானமாக மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

எமக்குக் கிடைத்த மாணவர்கள் உண்மையிலே அதீத இறை நம்பிக்கை உடையவர்களாகையினால் வெற்றிகளையும், சித்திகளையும் ஏற்றிடுவார்கள்.

கும்பாபிஷேகத்தினைச் சிறப்பாக நிறைவேற்றிய, சிவாகம கிரியாதத்துவநிதி பிரம்மஸ்ரீ செ. இரவிச்சந்திரக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையிலான அந்தணர் பெருந்தகைகளை வணங்குகின்றோம். மென்மேலும் வந்த சிறப்பே பெற்ற ஸாரிகாப் இன்பம் பயப்பதால் உன்னுடைய திருப்பணியைத் தலைமேற் கொண்டு, நன்றியோடு நினைவுகூருகின்றோம்.

## “ மிகு சித்தியான திருக்கோவில் ”

மருத நிலமதனில் மருவு பழம்பதி
　மனத்துக் குடைந்துறோனை
மாக் கொழிநெற் கன்னி வளர்கொழுஞ்
　மாதுவர் சுந்தர சோதநா
சுருக ஞாழலுகள் சோலையின் விருந்திட்ட
　கொழுமிய பழைய மாலையர்கள்
கனிந்த ஆலயம் விளைந்தநல் ஆலயம்
　சுபமுடி தூய்மை சேர்க்கும்
[illegible]
　[illegible]
[illegible]
　[illegible]
பெருநிலவாய கனை பழுது சுரந்திடும்
　மிகு சித்தியான திருக்கோவில்
வெள்ளை மருதனை மாணவர் அனைவரும்
　புகழ நாமத்துடன் செல்வமே.

2. நமது வாழ்வில் துன்பங்கள் அனைத்தையும், ஒவ்வொரு பேச்சை யும், ஒவ்வொரு விடை [illegible] நாம் பேசும் பேச்சு, விடுமின் பேச்சு, நாம் நடக்கும் நடை [illegible] கற்று இறைப் பின்னால் தான் நாம் [illegible]

3. பேராசை பலவற்றைக் கொண்டு [illegible] ஆசை வளர்க்கும். அதிக பேராசை [illegible] ஆசையால் பொறாமை, [illegible] நிம்மதியும் [illegible]

❀



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இலவச வைத்திய சேவை

சந்நிதியான் ஆச்சிரமம் நடாத்தி வருகின்ற சமூகத்திற்குரிய பலவிதமான செயற்பாடுகளில் இலவச வைத்திய சேவை இன்று ஒரு அத்தியாவசிய சேவையாக இடம் பெற்று வருகின்றது. பிரதி ஞாயிறு தோறும் வரும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இச்சேவையின் நிமித்தம் மந்திகை ஆதார வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றும் ''ஞான பண்டித சேவாகரபி'' வைத்திய கலாநிதி சி. கதிரைவேற்பிள்ளை அவர்களை அணுகிய போது திறந்த மனத்துடனும், சேவை மனப்பான்மையோடும் 14 - 10 - 2001 ல் ஆரம்பிக்கப்பட்டது தான் இச்சேவை.

இவ்வைத்திய சேவையின் அடிப்படையில் எவ்விதபலனையும் எதிர்பாராமல் பிரதி ஞாயிறு தோறும் மந்திகை ஆதார வைத்திய சாலையிற் பணிபுரியும் டாக்டர் S. யோகேஸ்வரதேவர் அவர்கள் தமது வைத்திய அனுபவத்தால் மென்மேலும் மெருகூட்டும் முகமாக சேவையாற்றி பலரது பாராட்டுக்குரியவராகத் திகழ்கின்றார்.

இத்துடன் மாதத்தில் இருதடவை யாழ் மாவட்டத்தில் மகப் பேற்று வைத்திய சேவையில் பிரபல்யம் பெற்று விளங்குபவரும், சேவை மனப்பான்மை கொண்டவரும், ஆச்சிரமத்தில் நடைபெறும் நித்திய அன்னதானப்பணிக்குத் தன்னாலியன்ற பங்களிப்பை வழங்கி வருகின்றவருமான டாக்டர் G. பவானி அவர்களால் நடாத்தப் படும் மகப்பேற்று வைத்தியசேவையும் வழங்கப்பட்டு வருவது குறிப் பிடத்தக்கது.

இதன் அடிப்படையில் 14 - 10 - 2001 தொடக்கம் 17-03-2002 வரை ஈராயிரம் பேருக்கு மேற்பட்டோர் பயன் பெற்றுக் கொண்டிருக் கிறார்கள் அவர்களுக்குரிய மருந்துவகைகள் அனைத்தும் சந்நிதியான் ஆச்சிரமத்தால் இலவசமாக வழங்கப்பட்டு வருவதும் சந்நிதிவேலவனது அருட்கடாட்சம் என்றே கூறலாம்.

பிறரது குற்றங்களைப்பற்றி ஒருபோதும் பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பணியினைத் திறம்பட நடாத்துவதற்குச் சேவையாற்று கின்ற அனைவருக்கும் எல்லாம் வல்ல முருகப் பெருமானது அருள் பூரணமாக கிடைப்பதற்கு பிரார்த்திப்போமாக.

ஜயம், சாந்தி

## மருத்துவ சேவைக்கு நிதி அன்பளிப்புச் செய்தோர் விபரம்

| | |
|---|---|
| திரு. க. கங்கைவேணியன் [illegible] யாழ். | 5000 ... |
| S. R. முத்துலிங்கம் செட்டியார் இராஜபாதைச் செட்டியார் அன் சன்ஸ் யாழ். | 1001 ... |
| சி. நாகலிங்கம் [illegible] | 1000 |
| செல்வி திலகவதி பெரியதம்பி முன்னாள் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் | 2001 ... |

ஓர் ஒரு மரக்கட்டை வீதியில் கிடந்தது. அவ்வழியே வந்த ஒரு பெண்மணி அக்கட்டையைப் பார்த்ததும் சற்றுத்தயங்கினாள். வீட்டிற்கு எடுத்துப் போய் விறகுகளுடன் சேர்த்துக் கொள்ளலாம் நன்று எரியும் என்று நினைத்தாள். பிறகு போய்விட்டாள். சற்று நேரம் கழித்து தச்சர் ஒருவர் அக்கட்டையைப் பார்த்தார். இதை எடுத்துப்போய் ஏதேனும் உபயோகப்படும் பொருளாகச் செய்து விற்றால் நல்ல வருமானம் கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டே போனார். பிறகு சிற்பி ஒருவர் அதைப் பார்த்தார். நல்ல சிற்பமாகக் கடைந்தெடுக்கச் சிறந்த மரம் என ஆசைப்பட்டார். கிடந்தது மரக்கட்டை தான். ஆனால் அதைப் பார்த்த மூவரும் ஒவ்வொரு விதமாக எண்ணினார்கள். இது போலத் தான் பரம்பொருளாகிய இறைவனும். ஆனால் வெவ்வேறு உருவங்களிலும் பெயர்களிலும் காட்சி தருகிறான் என்பதை நாம் தெரிந்து கொண்டால் நமது சமயம் வாழும்.

ஓ இருப்பதற்கான சில இலட்சியங்களை மனிதன் தனக்கு உருவாக்கிக் கொண்டுவிட்டால் அவன் உயிர் வாழ்வதற்குத் தகுதியுடையவனாகின்றான்.

இரண்டு கிடைப்பாயினும் கடமையை நினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01-08-2001 இல் இருந்து
# நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர்
## விபரம்

1) க. சிவக்கொழுந்து J. P. தேவகோட்டம் உடுப். 1001 00
2) பேராசிரியர் சிவசாமி மூலம் சண்முகராசா U. K. 10,000 ...
3) நியோ கிறீம் ஹவுஸ் யாழ்ப்பாணம் 1, மூ. அரிசி
4) ச. வைத்தியநாதக் குருக்கள் கந்தவளைக் கடவை 1000 ...
5) இ. ஆறுமுகம் அச்சுவேலி, தெற்கு 2500 ...
6) த. ரவீந்திரன், அரவிந்து அச்செழு 1000
7) S. சிவலிங்கராசா (தமிழ்த்துறை) பல்கலைக்கழகம் யாழ் 1000
8) ந. சிவபாலன் வண்ணார்பண்ணை 1000 ...
9) சுப்பிரமணியம் வையாபுரி குடும்பம் (கனடா) 1000 ...
10) வே. இரவீந்திரன் சித்தங்கேணி 2000 ...
11) சி. நந்தகுமார் மாரிசன் கூடல் உபதபாலதிபர் 3000 ...
12) இ. சிவராசா இறையகம், கரவெட்டி 2000 ...
13) சின்னத்தம்பி ஞானசரஸ்வதி உடுவில் 1000 ...
14) சதாசிவம் ஜெயசிங்கம் மீசாலை 500 ...
15) ஹேமலதா செல்வராசா (குழந்தைகள் ஞாபகார்த்த நிலையம்) நவாலி 500
16) அ. சின்னத்தம்பி சிவன்கோயிலடி சாவகச்சேரி 500 ...
17) நா. வி. மு. நவரெத்தினம் கொக்குவில் 1000
18) கு. சிவராஜசர்மா பால்பண்ணை வீதி, திருநெல்வேலி 1000 ...
19) ஆ. விநாயகமூர்த்தி சாளம்பை கரணவாய் மத்தி 1000 ...
20) வே. ந. துரைராஜா மக்கள் வங்கி ஊழியர் யா. பல். க. 2000
21) மு. கணேசு இணுவில் 1 மூடை மஸ்லி, சரக்குச்சாமான்
22) முருகேசு சுவாமிகள் அடியார் சார்பில் ஆ. அருணாசலம் செல்வச்சந்நிதி 40,000 ...
23) வே. இரத்தினசிங்கம் (சிவசக்தி மோட்டோஸ்) பரு. 1000 ...
24) Dr. R. பாக்கியநாதன் கல்வியங்காடு 1000 ...
25) பொ. சந்திரமோகன் ஏசன்ட் றேட்ஸ் யாழ் 5000 ...
26) ஸ்ரீ நதியா நகைமாடம் 2000 ...
27) குகன் ஸ்ரோர்ஸ் யாழ் 2 மூடை அரிசி
28) குபேரன் களஞ்சியம் யாழ் 2 மூடை அரிசி
29) வேணி களஞ்சியம் சத்திரத்துச் சந்தி 3 மூடை அரிசி
30) வைரமாளிகை கன்னாதிட்டி, யாழ் 3 மூடை அரிசி
31) பெற்றா ஏசென்ஸ் மருத்துவமனை வீதி யாழ் 3 மூடை அரிசி

மனிதனின் குற்றங்கள் நாவிலிருந்தே பிறக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31) க. கு. கந்தையாபிள்ளை அன்ரனிஸ் மருத்துவமனை வீதி, யாழ் 2 மூடை அரிசி
32) மொரு ஹெல்த் மருத்துவமனை வீதி, யாழ் 1 மூடை அரிசி
33) N. S. பழனிலிங்கம், பொதுஸ்ரோர்ஸ் மருத்துவமனை வீதி, யாழ் 1 மூடை அரிசி
34) விஜித்ரா ஸ்ரோர்ஸ் மின்சார நிலைய வீதி, யாழ் 2 மூடை அரிசி
35) V. S. B. குழாய் மின்சார நிலைய வீதி யாழ் 2 மூடை அரிசி
36) த. விக்னேஸ்வரன் கன்னாதிட்டி, யாழ் 1000 00
37) வெங்கடேஸ்வரா கஸ்தூரியார் வீதி, யாழ் 2 மூடை அரிசி
38) மகாராணி புடவையகம் பெரியகடை 1 மூடை அரிசி
39) பார்த்தசாரதி ஸ்ரோர்ஸ் கஸ்தூரியார், வீதி 1 மூடை அரிசி
40) அம்பிகாபதி பாலஸ்கடை பெரியகடை, யாழ் 1 மூடை அரிசி
41) இருள்சனா (பட்டாசுகடை) வண்ணார்பண்ணை யா. 1 மூடை அரிசி
42) நாதன் ஸ்ரோர்ஸ் நாவலர் ரோட், யாழ் 1 மூடை அரிசி
43) ரேடியோ தொலைக்காட்சியகம் ஸ்ரான்லி வீதி யா. 2000 ..
44) E. K. T. அம்பலவாண கெ. கெ. எஸ். வீதி, யா. 1 மூடை அரிசி
45) T. இராசலிங்கம் S. V. M. யாழ் 1 மூடை அரிசி
46) குமரன் திருநெல்வேலி 1 மூ. அரிசி, 15 kg புளி
47) லெனின் பிளாஸ்டிக் நிலையம் யாழ் 1 மூடை அரிசி
48) டொ. க. ஆ. க. அம்சலஸ் மருத்துவமனை யா. 1 மூடை அரிசி
49) S. M. B. யாழ் 1 மூடை அரிசி
50) சிமாட்டி யாழ் 1 மூடை அரிசி
51) ப. இருதயநாதன் குமாரவேல் } இணுவில் 2000 ..
52) வேலும் மயிலும் அரிசி ஆலை அச்சுவேலி 2 மூடை அரிசி
53) செ. இராசலிங்கம்,சந்திரசேகர இளையதம்பி உடுவில் 3000 ..
54) த. சண்முகநாதன் ஆனைக்கோட்டை 2000
55) V. அருணகிரி ஆரணியில், நாவலர் வீதி 1 மூடை அரிசி
56) திருமதி. கந்தையா ஆசிரியர் மகன் (ஜேர்மனி) 10,000
57) பகீரதன் ஸ்ரோர்ஸ் மருத்துவமனை வீதி யாழ் 1 மூடை அரிசி
58) S. R. சரவணபவான் தாவடி 500
59) Dr. வி. கதிரவேற்பிள்ளை கரவெட்டி 300 ..
60) க. நாகேந்திரம்பிள்ளை கரணவாய் தெற்கு 1000 ..
61) S. இராசகோபால் வதிரி 25 kg அரிசி 500
62) க. செல்லையா ஆசிரியர், கரவெட்டி 1500 ..
63) தி. சுப்பிரமணியம் எராலை தெற்கு 1010 ..
64) S. சிவஞானசுந்தர பத்தமேனி, அச்சுவேலி 3700

(தொடரும்)

அடக்கத்தில் சிறந்தது நாவடக்கமாகும்.



PUBLIC LIBRARY JAFFNA

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# பாண்டவர்கள் வெளிப்படுதல்

> சிவத்திரு. வ. குமாரசாமிஐயர் <

அர்ச்சுனன் தைரியமூட்டியமையால் உற்சாகமடைந்த உத்தரன் போரில் உற்சாகமாக ஈடுபட்டான். அர்ச்சுனன் தேரில் வருவதனைக் கண்ட துரியோதனன், காலம் முடிவடைய முன்பு அர்ச்சுனன் வெளிப்பட்டான் என்று ஆர்ப்பரித்து, மீண்டும் அவர்கள் வனவாசம் செல்ல வேண்டும் என்று சத்தமிட்டான். அப்பொழுது பீஷ்மர் மிகவும் கோபமடைந்தவராய் அவனை அடக்கலானார். பின்னர் போர் நடைபெற்றது. அர்ச்சுனன் மிகவும் ஆவேசமாகத்தாக்க முற்பட்டான். கர்ணன், சகுனி, துரியோதனன் முதலானோர் எதிர் நிற்க முடியாது, மிகவும் கஷ்டமடைந்தனர். அர்ச்சுனனோ எல்லோரையும் அக்கணமே கொன்றொழிக்கும் ஆவேசம் கொண்டவன் போற்போரிட்டான். எதிர் நிற்க முடியாத கௌரவர் சேனைகள் சிதறி ஓடின. இதனைக்கண்ணுற்ற பீஷ்மர் போரினை நிறுத்தக் கட்டளை இட்டு நாடு திரும்புமாறு துரியோதனனைப் பணித்தார். துரியோதனன் அவமானமடைந்தவனாய் உள்ளம் கொதித்த நிலையில் தனது நாடு திரும்பினான்.

அர்ச்சுனன் பசுநிரைகளை மீட்டு வெற்றிவாகை சூடினான் வெற்றி பெற்ற அர்ச்சுனன் தமது படைக்கலங்களை மீண்டும் மறைவாக வைத்து விட்டு மீண்டும் பெண்ணுருக்கொண்டு உத்தரனுடன் விராட நகர் திரும்பினான். இந்நிலையில் சுசர்மாவை வெற்றி கொண்ட விராட மன்னனும் மகிழ்வுடன் தனது தலைநகர் திரும்பினான். தனது வெற்றியை மிகவும் களிப்புடன் கொண்டாட முயன்று மைந்தனை வருமாறு பணித்தான். அப்பொழுது உத்தரன் போர் புரியச் சென்ற விடயத்தை அறிந்து மிகவும் கலக்கமடைந்தான்.

உன்னைப்போலவே அயலானையும் நேசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ சேனையைத் தனியே உத்தரன் எதிர் கொள்ளச் சென்றுள்ளானே என்று விசனமடைந்தனன். அப்பொழுது கங்கனாக அவருடன் இருந்த யுதிஷ்டிரன் மன்னனை நோக்கி "பேடிதே பிருகன்னளை என்பவள் சாரத்தியம் செய்து தேரோட்ட உத்தரன் போருக்குச் சென்றுள்ளான். எனவே அவனுக்கு வெற்றி கிட்டுவது நிச்சயம். எனவே, தாங்கள் விசாரப்பட இதில் ஏதுமில்லை" என்று கூறினார். இவ்வேளையில் உத்தரன் வெற்றியை அறிவிக்கும் தூதுவர்கள் அரசவைக்கு வந்து சேர்ந்து வெற்றிச்செய்தியை எடுத்துரைத்தனர். இதனால் விராட மன்னன் உள்ளம் பெருமகிழ்வு கொண்டு, கொண்டாட்டம், களியாட்டங்களை ஆரம்பிக்குமாறு கட்டளை இட்டான்.

இந்நிலையில் வஞ்சகச் சோகமயமான சூழ்நிலை ஏற்பட்டது. உத்தரனுக்குப் பெரும் வரவேற்புக்கள் நடைபெறச் சித்தமாகியது. விராடமன்னன் உற்சாக மிகுதியால் கங்கனைச் சூதாட அழைத்தான். அப்பொழுது கங்கன் "மன்னா நான் சூதாடுவேன். ஆனால் எனக்குச் சூதாடுவதில் பிரியம் இல்லை தாங்கள் கட்டளை இடும் பட்சத்தில் தங்களுடன் ஆட வருகிறேன்" என்று மறுமொழி பகர்ந்தார். சூதாட்டம் ஆரம்பமாகியது அப்பொழுது விராடமன்னன் பெருமிதம் கொண்டவனாய் "கங்கரே! தேவர்களும் வெல்ல முடியாத கௌரவர்களை என் புதல்வன் வெற்றி கொண்டுள்ளான். இதனால் எனது உள்ளம் பெரும் உவகை கொள்கிறது" என்றான். இவ்வுரைகளைச் செவிமடுத்த யுதிஷ்டிரர் "பிருகன்னளை சாரத்தியம் செய்தமையாற்றான் உமது புதல்வன் வெற்றி பெற்றுள்ளான். இதில் ஆச்சரியம் ஏதுமில்லை" என்றார். இவ்வண்ணம் யுதிஷ்டிரர் கூறியதும் அளவற்ற சினம் கொண்ட விராடமன்னன் "அந்தணரே, நீர் எனது பொறுமையை சோதித்துக் கொண்டிருக்கிறீர். எனது மைந்தனது வெற்றியைப் பாராட்டும் உள்ளம் உமக்கில்லை. பேடி ஒருவன் சாரத்தியம் செய்ததனைப் பெரிதுபடுத்தி அவனையே பாராட்டுகிறீர்" என்று கூறிக் கோபத்துடன் தன் கையிலிருந்த சூதாட்டக் காய்களை வீசியெறிந்தான். அக்காய்களில் ஒன்று யுதிஷ்டிரரின் மூக்கில் பட்டுக் காயம் ஏற்பட்டது. காயத்திலிருந்து இரத்தம் பெருகியது. அவ்விடத்தில் பணி புரிந்து கொண்டிருந்த திரௌபதி பதறியவளாய்ப் பெருகிய இரத்தத்தை ஒரு பாத்திரத்தில் ஏந்திக்கொண்டாள். இதனைக் கண்ணுற்ற விராட மன்னன் வியப்படைந்தவனாய் "பெண்ணே ஏன் இவ்வாறு செய்கிறாய்" என்று வினாவினான். அப்பொழுது திரௌபதி "மன்னா! கங்கரின் மகிமை உமக்குத் தெரியாது. சாதுவான முனிவர் இரத்தம் மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுகிறதோ அத்தனை ஆண்டுகள் உங்களது நாட்டில் மழை பொழி யாது. அவ்வளவு மகிமை பெற்றவர் கங்கர் அதனாற்றான் இவ்வாறு செய்தேன் '' என்று தெரிவித்தாள்.

இவ்வேளை காவலர் வந்து '' மன்னா போரில் ஜெயமடைந்த உத்தரனும் சாரத்தியம் செய்த பிருகன்னளையும் தங்களைக்காண வருகிறார்கள் '' என்று அறிவித்தான். மன்னன் '' இருவரையும் அழைத்து வா '' என அறிவிக்கக் கங்கன் உத்தரனை மட்டும் அழைத்து வருமாறு பணித்தான். இரத்தம் பெருகிய நிலையில் அர்ச்சுனன் தன்னைக்கண்டால் விபரீத விளைவுகள் ஏற்படும் என் பதனைக் கருத்திற் கொண்டே கங்கன் இவ்வாறு பணித்தான். கங் கனின் உத்தரவின் படியே மன்னரிடம் வந்த உத்தரன் முதலில் தந்தையைப் பணிந்து, கங்கன் யார் என்பதனை அறிந்து கொண்ட மையால் அவரையும் வணங்கிய பொழுது கங்கரின் முகத்தில் இரத் தம் பெருகி வருவதனைக் கண்டு துணுக்குற்றவனாய்த் '' தந்தையே! இவருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது? '' என்று தந்தையை வினா வினான். அப்பொழுது மன்னன் விராடன் நடந்த சம்பவங்களை விபரித்தான். தந்தையின் பதிலைக் கேட்டதும் உத்தரன் பதற்ற மடைந்தவனாய்த் '' தந்தையே பெரும் தவறு செய்து விட்டீர்கள் இவர் யார் என்பது உங்களுக்குத் தெரியாத படியால் தவறு ஏற்பட்டு விட்டது. எனவே இவரிடம் தாங்கள் மன்னிப்புக்கேட்க வேண்டும் '' என்று உரைத்தான். விராடமன்னன் தனயனின் சொற்களை மதித்து அவ்வாறே செய்தான்.

பின்னர் '' உனது வெற்றி பெருவெற்றி அல்லவா? தேவர் களாலும் வெல்வதற்கரிய கௌரவர்களை எவ்வாறு நீ வெற்றி கொண்டாய். இதனால் என்னுள்ளம் பெருமிதம் கொள்கிறது '' என்று மகனைப்பாராட்டலானான். தந்தையின் பாராட்டுரைகளால் மனமகிழ்ந்த உத்தரன், அர்ச்சுனனின் கட்டளைப்படி உண்மையை மாற்றிக் கூறலானான். '' தந்தையே தேவமைந்தன் ஒருவன் போர்க் களத்தில் பெரும் உதவி புரிந்தமையால் நான் வெற்றி பெற்றேன் '' என்று உத்தரன் உரைத்தமையைச் செவிமடுத்த விராடமன்னன் அத்தேவ மைந்தனை அழைத்து வந்து அவனுக்குத் தகுந்த மரியாதை கள் செய்ய வேண்டும் என்று பணித்தான். அதற்கு உத்தரன், அவன் விரைவில் வருவான் ' என்று பதில் கூறலானான்.

இச்சம்பவத்தின் பின் இரண்டு மூன்று தினங்களில் பாண்டவர் களின் அஞ்ஞாதவாச காலம் முடிவடைந்தது. அவர்கள் எல்லோரும் தம்மை யார் என வெளிப்படுத்தி அரசவைக்குச் சென்ற போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விராடமன்னன் பெருமகிழ்வு கொண்டான். உத்தரனின் வெற்றிக்கு அர்ச்சுனனே காரணம் என்பதையும் அறிந்து கொண்டான். தான் அவர்களை அறியாததால் ஏற்பட்ட பிழைகளைப் பொறுத்தருளுமாறு மன்னிப்புக் கேட்டான். அவர்கள் தன்னுடன் தங்கியிருந்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தவனாய்த் தனது மகளை அர்ச்சுனன் மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அப்பொழுது அர்ச்சுனன் தான் குருவின் ஸ்தானத்திலிருந்து அவளுக்கு நடனம் கற்பித்தமையால், சிஷ்யையாக இருந்த பெண் தனது ஆசானை மணப்பது தர்மமுறையன்று. எனவே, உத்தரையைத் தனது புதல்வனாகிய அபிமன்யுவிற்கு மணம் புரிந்து வைக்கலாம்" என்று தெரிவித்தான். அர்ச்சுனனின் தர்ம வழியில் உதித்த ஆலோசனையை விராட மன்னன் ஏற்றுக்கொண்டான். பெருமகிழ்வு கொண்ட மன்னன் பாண்டவர்களைத் தகுந்த முறையிற் கௌரவித்து அவர்களுக்குச் சகல வசதிகளையும் செய்து கொடுத்து மகிழ்ந்தான்.

பாண்டவர்கள் தலைமறைவு வாழ்க்கையை முடித்து வெளிவந்து விராடமன்னனின் நகரமாகிய உபப்பிலாவியத்தில் தங்கி இருப்பதனைக் கேள்வியுற்று உறவினரும் நண்பர்களும் பாண்டவர்களை வந்து சந்தித்தனர். கண்ணபிரான் அபிமன்யு முதலானோருடன் வந்து பாண்டவர்களைச் சந்தித்தார். கண்ணபிரானின் வருகையால் பாண்டவர்கள் பெருமகிழ்வு கொண்டனர். இச்சந்தர்ப்பத்தில் அபிமன்யுவிற்கும் உத்தரைக்கும் திருமணம் இனிது நிறைவேறியது.

[ தொடரும்......

## மங்கல வாழ்த்து

தான சேவையும் மிகுந்தவர
 பூசையும், பக்திநெறி பரப்பும்
ஞானச்சுடரும் தெய்வக்
 கலை பரப்பும் இனிமை நிறைந்த
நாவலிசை பரப்பும் இசைக்
 கச்சேரிகளும் இன்னும் பலவும்
பெருமை பூசைபோற்றும் சேவை
 தானில் சமர்ப்பிக்கும் சந்நிதியான்
ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப்
 பேரவை வாழிய வாழியவே!

— இராம ஜெயபாலன்

நீ இருப்பது முக்கியமல்ல; சிறந்திருப்பதுதான் முக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


[ தொடர்ச்சி...

உ

" உள்ளத்தனையது உயர்வு "

# சக்தி வழிபாட்டின் சிறப்பு

செல்வி க. சசிலேகா



சக்தி வழிபாட்டு நெறிமுறைகளைத் தனியாக எடுத்து விளக்குவன சாக்த ஆகமங்கள். இவை தந்திரங்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றின் எண்ணிக்கை எழுபத்தேழு என்றும் அறுபத்துநான்கு என்றும் இரு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. சக்தி வழிபாட்டின் பல்வேறு முறைகளையும் சாக்த தந்திரங்களிலே காண முடிகின்றது இவை, ஆன்மாவை, ஏறுவரிசையில் ஆரோகணமாக பசு, வீரம் திவ்வியம் என மூன்று நிலையிற் பிரிக்கின்றன. பசு என்பது தலை நீங்கப் பெறாத ஆன்மா. அது படிப்படியாகப் பக்குவப்பட்டு மேலேயுள்ள வீரம், திவ்வியம் ஆகிய நிலைகளை அடையும். அதாவது, ஆன்மாவானது தன் விலங்கியல்பை விடுத்துத் தெய்வீகக் குணம் பெறுதல் வேண்டும். இதற்குத் தாமச குணத்தை ராஜசத்தாலும் ராஜசகுணத்தைச் சாத்துவிகத்தாலும் வெல்லுதல் வேண்டும் என்பதாம். இதற்கு, ஆசாரங்களை தந்திரம் ஆனது வரிசையாக ஏழு ஆசாரங்களைக் கூறுகின்றது. அவையாவன வேதம், வைணவம், சைவம், தட்சிணம், வாமம், சித்தாந்தம், கௌலம் என்பனவாகும்.

முதல் மூன்று ஆசாரங்களும் பசு ஜீவன்களுக்கென்றும் அடுத்த இரண்டும் வீர ஜீவனுக்கென்றும் ஏனைய இரண்டும் திவ்விய ஜீவனுக்கென்றும் உண்டானவை. வேதம், வைணவம் சைவம் ஆகிய முதல் மூன்று ஆசாரங்களும் முறையே கர்மம், பக்தி, ஞானம் ஆகிய மூன்று மார்க்கங்களுக்கென்றே ஏற்பட்டவை. வேதத்தில் சடங்குகளும் வைணவத்தில் தியானமும் சைவத்தில் ஞானமும் வலியுறுத்

விலையுயர்ந்த பொருள் ஆசையின்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றப் பெறுகின்றன. தட்சிணாசாரமானது ஏனைய சமய வழிபாட்டு முறைகள் போல நேரடியானதும் இலகுவானதுமான வழிமுறைகளைக் கொண்டமைந்தது. இவ்வாசாரத்தில் முதன்மூன்று மார்க்கத்திலும் அடைந்த முன்னேற்றத்தைப் பாதுகாக்க முயற்சி எடுக்கப்படுகிறது. ஆனால், வாமாசாரமார்க்கமானது சில அருவருப்பான நடைமுறைகளைக் கொண்டுள்ளது. இதுவரை முன்னேறிய பாதையினை வாமாசாரத்தில் பின்நோக்கிச் செல்கிறது. இவ்வாசாரத்தில் மதுவையும் மங்கைகளையும் பயன்படுத்துகின்றனர். இங்கு இடம்பெறும் சடங்கு 'பஞ்சதத்துவம்' எனப்படும். அதாவது தெய்வத்திற்கு ஐந்து வகையான பொருட்கள் வழங்கப்படுகின்றன. இவை, மது (மதுபானம்), புலால் (மாமிசம்), மீன் (மத்ஸ்யம்), தானியம் (முத்திரை), மாது (மைதுனம்) என்பனவாகும். இவை, சமஸ்கிருதத்தில் 'ம' என்னும் எழுத்தால் தொடங்குவதனால் இச்சடங்கு 'பஞ்சமகாரம்' எனப்படும். இவ்வழிபாட்டு முறைகள் இரகசிய முறையில் அமைகின்றன. இவ்வழிபாட்டு முறையின் படி, வழிபடுவோர்கள், முதலில் மது, மாமிசம், முதலிய பொருட்களில் பற்று வைத்துப் பின்னர் அவற்றின் பற்றினைச் சக்தியிடம் திருப்புவது அவர்களின் இலட்சியமாகும். இந்நிலையைக் கடந்த ஆன்மா, பேரின்ப நிலையை அடையும். தீவிர அமைப்புக் கொண்ட இவ்வழிமுறைகள், வேதங்களையும் சாத்திரங்களையும் தவறான வழியில் இட்டுச் செல்லலாம். அதனால் சமய அறிஞர்கள் பலரால் வாமாசாரமார்க்கமானது கண்டிக்கப்படுகின்றது.

பொதுவாகத் தந்திரம், மந்திரம், யந்திரம் என்னும் மூவகை வழிபாட்டு முறைகளைச் சாக்த சமயம் கொண்டிருக்கிறது. 'தந்திரம்' என்பது ஆகம, இதிகாச வழிபாட்டு விளக்கம். 'மந்திரம்' என்பது அவ்வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்படுகின்ற பிரார்த்தனைப் பாடல்கள் முதலியவை. 'யந்திரம்' என்பது இறைபெருஞ் சக்தியை வெளிப்படுத்துகின்ற ஒருவகைக் குறியீடு அமைப்பாகும். மந்திர எழுத்துக்களாலும் கோடுகளாலும் இது உருவாக்கப்படுகின்றது. சக்தி வழிபாட்டிற்குரிய ஒரு யந்திரமானது 'ஸ்ரீ சக்கரம்' அல்லது 'சக்ரராஜம்' எனப் போற்றப்படுகின்றது. இது ஒரு தகட்டில் மட்டுமன்றாமல் முப்பரிமாண முறையில் விக்கிரகம் போன்ற உருவ அமைப்பிலும் செய்யப்படுகின்றது. இதற்கென வழிபாட்டிற்காக விசேடமாக அமைக்கப்பட்ட பத்ததிகளுமுள்ளன.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால் தூயவர் ஆவர்......

> இரா. கேதீசன் <



நினைத்துவழிபடும் அடியவர்களின் இடர் தீர்க்கும் வடிவேல் முருகன் எல்லாமாய் அல்லவுமாய்த் தனித்து விளங்கும் பரம்பொருள். இப் பரம் பொருளின் மகிமையைப் பக்தியினால் தான் அநுபவிக்க முடியுமே தவிர மற்றவர்களுக்கு எடுத்துரைப்பது எளிதன்று திருவருள் அறிவினால் உணர்ந்தால் பேதம் அகன்று இன்பம் தோன்றும் 'பக்தி வலையிற் படுவோன் காண்க' என்று மாணிக்க வாசகரும் ''பத்து உடை அடியவர்க்கு எளியவன், பிறர்க்கு அரிய வித்தகன்'' என்று நம்மாழ்வாரும் அருளியிருக்கின்றனர்.

இவ் சிறப்புக்கு உரியவரும் கற்பனை கடந்த சோதியாகிய சிவமூர்த்தியே நன்னெறியை நிலைநிறுத்தவும் தீ நெறியை அகற்றவும் மக்களை உய்விக்கவும் தான் கருணை கூர்முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே ஒரு திருமுருகனாக வந்து உதித்தனன் உலகம் உய்ய என்று கந்தபுராணம் செப்புகின்றது. கந்தனின் பெருமையோடு கருத்தாழம் மிக்க வாழ்வியற் சிந்தனைகளையும் அது உலகுக்குத் தெளிவாகத் தந்துள்ளது.

முருகப்பெருமானுக்குச் சூரனை வதைக்க மனமே இல்லை, பாவத்தின் மேல் பாவம் செய்து தீராத பழியைத் தேடிக்கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டமான் சூரன் ஆயினும் அவன்பாலும் பரிந்து தன்னைச் சரண் அடைந்து தேவர்களையும் விடுதலை செய்து நல்வாழ்வு பெறவேண்டுமென்றே எம்பெருமான் கருணையுடன் போரையும் நீடித்து தன் விஸ்வ ரூபத்தையும் காட்டினார். இறைவனைச் சரணடைந்தால் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு மோக்ஷத்தை அடையலாம் என்பது கீதை.

சூரபத்மன் முருகப்பெருமானைச் சரணடையாமல் ஆணவத்தினால் பெரிதும் வடிவம் கொண்டு யாவரையும் அழிக்க முயன்றே வீறு கொண்டு எழுந்து வேளையாவும் சூரன் கடலிற் சென்று உலக மெலாம் நிலைகுலையும் வகையில் பெரிய மாமர வடிவில் நின்றான். வேலாயுதம் அம்மரத்தைச் சிதைத்ததுடன், சூரனின் வஜ்ஜிர தேகத்தையும் இரு கூறுகளாகப் பிளந்தது.

பிளவுபட்ட சூரனது உடற்கூறுகளில் ஒன்று சேவலாகவும் மற்றொன்று மயிலாகவும் உருவங்கள் கொண்டு எம்பெருமானை எதிர்த்துப் போருக்கு ஆரவாரித்து வந்தன.

கருணைக் கடலாகிய கந்தன் மயிலைத் தனது வாகனமாகவும் சேவலைத் தனது வெற்றிக் கொடியாகவும் ஏற்று அருள் புரிந்து சூரனுக்கு மேலான பதத்தைத் தந்தார்.

வேதத்தின் தனி மந்திரமாகிய ஓங்காரமே முருகனின் முருகப்பெருந்திரு கரஸ்பரிசனமானதால் சேவற்கொடியாகவும் மயிலாகவும் பாக்கியத்தைப் பெற்று அப்பெருமானைப் பிரியாது இப்பொழுதும் அக்கினி தேவனும் சேவற்கொடியாகத் திகழ்ந்து உயர்ந்தனர். இத்தகைய மாபெரும் பதத்தைக் கொடியவனாகிய சூரபத்மனும் இறுதியில் அடைந்தான் என்றால், முருகப்பெருமானின் திருநாமத்தை நினைத்தாலும், கேட்டாலும், சொன்னாலும் அவ்வாறு அப்பரம் பொருளின் திவ்ய உருவத்தைத் தரிசித்தாலும், தொழுதாலும், எவ்வளவிலும் எத்தனை தீமைகளைச் செய்தாலும் அவர்கள் புண்ணிய சீலர்களாகி அறியாத பேரின்பம் அடைவர் என்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ?

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் அந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற்று உய்ந்தான்
கந்தபுராணம் -

தக்க சமயத்தில் உதவும் கைகளே புனிதமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன் திருத்தல புராணம்

[] சி. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள் []

வாய்கட்டிக் கதிர்காமர் வழுவில் லாமல்
மலர்ப்பதத்தைப் பூசித்து வருங்கா லத்துக்
காய்கட்டிக் கழல்கட்டிக் கடம்பு கட்டிக்
களத்தசடை கட்டிமணிச் சுட்டி கட்டித்
தாய்கட்டி விளையாடும் சண்மு கத்தான்
தரளநகை கொட்டிக்கைத் தாளம் தட்டிப்
பாய்கட்டிக் கலமோடும் பரவை ஓரம்
பலன் கிட்டத் திருநடனம் பயிலு வானே (80)

## உபதேசப் படலம்

பேரான கதிர்காமர் மனக்கண் காணப்
பெருமானார் தன்வடிவப் பிரபை காட்டி
நேராக முன்னின்று நிறைந்த சைவ
நீதிநெறிப் படிமுதற்கண் நினைக்கு மாறோங்
காரானை முகத்தனெனும் கணேச ரோடு
கைதழுவி விளையாடிக் களிப்புக் கொண்டு
நீருறும் வேற்கரணி என்னும் நாம
நீள்பொய்கை தனிற்குதித்து நீந்து வானே (81)

பூசைமுடித் தமுதருந்திப் புதிய வேலன்
பொற்கோயில் வாசலிடைப் புகழ்ப்பா மாலை
ஆசையுடன் கதிர்காமர் அமர்ந்து பாட
ஆறுமுகன் வந்தெதிரே ஆடல் காட்டி
ஓசைபெறு முன்பாடல் உவந்தோ மின்ப
மோங்குதமிழ் மொழியின்மகிழ்ந் துறைவோம் வேத
வாசமிகு வாடாத மாலை யெல்லாம்
வண்டமிழுள் அடங்குமென வார்த்தை சொல்வான். (82)

மருதின்ன லொழியவுரல் வலிந்தி ழுத்த
மாயவனின் மருகன்கதிர் காம ரோடங்
கிருதிண்ணை தனிற்குடிசைக் கோயி லின்கண்
எதிரெதிரா யிருந்துகதை இயம்பும் வேளை
வருதிண்ணை மிகுவேத மரபுப் பூசை
மாண்புடைய தென்னினும்தம் மனத்தி னாலே
ஒருதிண்ண வுறுதியுடன் ஒங்கு மன்பின்
ஒளிவிளக்குப் பூசனையே உவப்போம் என்பான். (83)

அன்பை விதைத்தவனே, ஆனந்தத்தை அறுவடை செய்கிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௮

# [illegible]

60) வாய்கட்டிக் கதிர்காமர் ஆலயத்திற்குப் பூசையாற்ற வரும்பொழுதில் [illegible]

61) கதிர்காமம் [illegible] – [illegible]

62) பூசை [illegible] கதிர்காமர் [illegible]

63) கதிர்காமத்து [illegible] கதிர்காமர் [illegible] என்று கூறுவார்.

உ

# உயர்திரு யோக சுவாமிகள்

முதுபெரும் புலவர், வை. க. சிற்றம்பலம்

அன்புக்குரிய ஞானச்சுடர் வாசகர்களே! வணக்கம். சென்ற ஆண்டு பங்குனித்திங்கள் வெளிவந்த ஞானச்சுடர் இதழில் இப்பெரியாரைப் பற்றிய கட்டுரையொன்று வரைந்துள்ளேன். அதில் சுவாமிகளது வரலாற்றுடன் பொன்பெற்ற திருப்பதிகம் (இடரினுந் தளரினும் - சம்பந்தர்) பாடி தன்னையடைந்த சங்கானை, நாகலிங்கப் பரதேசியாருக்கு, அற்புதங்காட்டி, பொற்காசுகளைக் கொடுத்தமை பற்றியும் குறிப்பிட்டேன். உயர்திரு. செல்லப்பாச்சுவாமியாரின் திருவருள் பெற்ற சீடர் தான் யோகர் சுவாமிகள். அந்தச் செல்லப்பாச் சுவாமியாரின் சீடபரம்பரையைச் சேர்ந்தவர் தான் சந்நிதியானைத் தரிசித்து அன்னதானஞ் செய்த கடவுள்சாமியார் என்பதையும் மறந்திருக்கமாட்டீர்கள். அந்த அடியாரது வழிவழிச் சந்ததியில் வந்தவரே மயில்வாகனம் சுவாமிகள், முருகேசுச் சுவாமிகள், இப்போதிருக்கும் யோகனதாஸ் சுவாமிகளும் அவ்வழி வந்தவரே.

உயர்திரு. யோகசுவாமியாரின் குருபூசை இந்த விஷு வருடம் பங்குனி மாதம் 11 ம் திகதி (25 - 03  2002) திங்கட்கிழமை நடைபெற்றது. அதைநினைவு கூருமுகமாகவே இக்கட்டுரையும் வெளிவருகிறது. அடியேன் சுமார் ஒன்பது வருடங்கள் இடையிடையே குடும்பத்துடன் சென்று சுவாமிகளைத் தரிசித்தும், பஜனை பாடியும், சுவாமியாரைத் தரிசிக்கும் அருளாளருடன் ஊடாடியும் வந்துள்ளேன். சுவாமிகளைப் பற்றி பல மெய்யடியார்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் நூல்களை வெளியிட்டுள்ளார்கள். காலஞ்சென்ற வித்துவான், க. சி. நடராசா B. O. L. அவர்கள் சுவாமியின் வரலாற்றுடன் ஒரு பிள்ளைத் தமிழையும் அவர் மேற்பாடியுள்ளார். சுவாமிகளின் சிவதொண்டன் ஆச்சிரமத்திலிருந்து வரும் சிவதொண்டனை அன்று நடாத்தியவரும் அவரே. ஒருமுறை சுவாமியார் என்னை 'சேக்கிழார் சுவாமிகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதிச் சிவதொண்டனுக்குக் கொடுக்கும் படி அன்புக் கட்டளையிட்டார்கள். நான் சம்மதித்தேன். எழுதிவைத்தேன். ஆனால் காலதாமதமானது. அடுத்த நாள் என்னை நோக்கி வந்த சிவதொண்டனில் யாரோவோர் அன்பர் எழுதிய சேக்கிழார் சுவாமிகள் கட்டுரையிருந்தது. ஏங்கினேன்;

பேருக்காகவும், புகழுக்காகவும் ஒன்றும் செய்யாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபவித்துக்கொண்டிருந்தேன். அன்று மாலை காரில் கொழும்புத்துறை சென்றேன். பயபக்தியாய் வணங்கி, பணிவோடு நின்று காரணங்களைச் சொல்லி ரிக்க டிசேரோடு, யாவெழுதிய கட்டுரையைப் பொறுத்தவரை பரவாயில்லை அடுத்த மாதம் இக்கட்டுரையும் இடம் பெறும் என்று, திருவாய் மலர்ந்தார்கள். விவேகானந்தன் 35-ஆம் மலரில் இந்தக் கட்டுரை வெளிவந்ததை அன்பர்கள் அறிவார்கள். அதன் பின் இடையிடையே விவேகானந்தனுக்கு எழுதிவந்தேன்.

சுவாமிகளிடம் நிதமும், அதிகமாக மாலை நேரத்தில், ஏதேனும் பொருளையுடையுடன் அடியார்கள் வருவதுண்டு. தமது அன்பு அடி யார்களை அரவணைத்து உபசரிக்கும் சுவாமிகள் சிலநேரம் அவர் களை ஆட்கொள்ளும் நிமித்தம் கடுமையாக இடையிடையே பேசுவ தையும் கண்டேன். ஆனால் என்னை ஒரு நாளும் அவர் பேச வில்லை, என்று மனைவியாருக்கு மகிழ்ச்சியுடன் கூறுவேன். 'உண்மைதான்' என்று அவரும் கூறுவார்.

ஒருநாள், கொக்குவிலிலுள்ள எனது மைத்துனர் மாலினியின் வீட்டைப் பார்க்க, மனைவியாருடனும் மூன்று மக்களுடனும் பிரவு ஒழுங்கைகளில் காரிற் சென்றேன். குருவாசிர்வாதத்தின் பேரில் நேரம் போய்விட்டது. இன்றும் மூன்று நாள் சென்றால் சுவாமி களைத் தரிசிக்கலாம் என்றேன்; சென்றேன்; சுமார் எட்டரை மணி யிருக்கும். கொழும்புத்துறை சென்று வெளிப் படலையைத் திறந் தேன். அப்போது, சுவாமிகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ஏதோது, நேரம் எட்டரை மணி, இந்நேரம் உங்களுக்குக் கிடைத்தது மாலை மாலியைப் பார்த்துவிட்டுப் போகாமல் இங்கே ஏன் வந்தீர்கள்? என்று உரைப்பாரை, உரக்கக் கூறினார்கள். பேச்சு முடிந்ததாகக், நிறுத்தும் அப்படியே நின்று அவரைக் கூப் பிட்டுக் கும்பிட்டபடி திரும்பிக் காரடிக்குச் சென்றோம். உடனே ஒருவர் ஓடிவந்தார். "வனமாக, வந்தவழியை விட்டு வேறுவழி யாக உங்களை வீடு செல்லட்டாம் என்று சுவாமியார் சொல்லச் சொன்னார்; என்றார். வியந்தோம் முன்னிருக்க ஆக்கபேல்லாம் மாறி, அவருடைய அருள் கிடைத்ததென்று மகிழ்ச்சியுடன் திரும் பினோம்.

எனது பிள்ளைகள் மூவருக்கும் இசையுணர்வுடன் நற்சிந் தனைப் பாடல்களும் மனனம் பண்ணுவித்துச் சுவாமிகளின் முன் பாடுவிப்பேன். ஒருமுறை நற்சிந்தனைப் பாடலொன்றை, அதிலே யுள்ள இராகம், தாளத்தின் படிப்பாடாது வேறொரு மெட்டில்

பாடச் செய்தேன். அதைக்கேட்ட சுவாமிகள் இது வேறொரு மெட்டாயமைந்திருக்கு, இன்னுமொரு முறை பாடுங்கள் என்று பாடுவித்து கேட்டு அகமகிழ்ந்து சொன்னார்கள்.

இந்தப் பிள்ளைகள் நல்லாய் வருவார்கள் அவர்கள் பண்ணுடன் திருமுறைகளைப் பாடச் செய்து உன்னைப் போல் உபாத்திமாராக்கி விட்டால், அது ஒரு தொண்டாகும் என்றுங் கூறினார்கள். அப்படிச் சுவாமிகள் திருவாக்கு அப்படியே அவர்கள் இன்று அப்பணியைச் செய்கிறார்கள் எமது பிள்ளைகள் பாடிய நற்சிந்தனைப் பாடல் இதோ.

**இராகம்: ஜோகினி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

நல்லூரைக் கும்பிட்டுநீ பாடு அதனாலே
நாட்டிலுள்ள பிணிகளோடும்

**அநுபல்லவி**

செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு
தேங்கா யுடன்பழம் கொண்டு நீசெல்லு

**சரணம்**

வாடியுன்மன மோடினாலும் வருத்தங்கள் கோடி
கோடியாகக் கூடினாலும் — குறைகள் வந்து (நல்)
தேடியுன்னை மூடினாலும் - செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடியோடிப் போமே... (நல்)
பெண்டுபிள் ளைகளென்று பேதமை கொண்டுநீ
கண்ட கண்ட இடங்கலங்கி நீதிரியாதே. (நல்)

**மலர் 40 இதழ் - 11 ( 17 - 10 - 44 )**

---

ஃ உண்மையான மனிதன் வசதியிருக்கும் பாதையை நாட மாட்டான். மாறாக கடமையிருக்கும் பாதையைத்தான் தேடுவான். அவன் தான் செயல் திறனுள்ள மனிதன்.

ஃ மனிதன் தான் எண்ணியபடி செய்து முடிந்தால் அது மதியின் வெற்றி என்கிறான். வேறு விதமாக முடிந்தால் அது விதியின் செயல் என்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# 21ஆம் நூற்றாண்டில் ஈழத்து இந்து சமயத்தவரிடையே ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றிய சிந்தனைக் கருத்துக்கள்

( ஆறு. திருமுருகன் )

## 1. 2 இந்துக்களின் பெயர் மரபு

பாரம்பரியமாக இந்துக்கள், தம் சமயம், மொழி சார்ந்த கருத்துமிக்க நாமங்களை தம் பிள்ளைகளுக்குச் சூட்டி சமய மரபைக் காத்தனர். இன்று ஈழத்து இந்துக்களிடையே கருத்தற்ற நாமங்களைச் சூட்டுகின்ற அநாகரீகம் வேகமாகப் பரவி வருகின்றது. இதனை ஒவ்வொரு இந்துக்களும் உணர்ந்து தம்மைத்தாம் நிலை நாட்ட, இந்து தமிழ் மரபை காப்பாற்ற முனைதல் வேண்டும். பிற மொழிப் பெயர்களைத் தம் பிள்ளைகளுக்குச் சூட்டுவது கௌரவம் என நினைப்பவர்கள் பெரும் வரலாற்றுத்தவறை செய்கிறார்கள் என்பதை அறிஞர்கள் அறிவர்.

## 1. 3 இல்லற வாழ்வு

இந்துக்களிடையே இல்லற வாழ்க்கைக்குரிய நிச்சயதார்த்தத்தில் சீதனம் முதன்மை பெறுகின்ற தன்மை வளர்ந்து செல்கின்றது. இது வேதனைக்குரியது. இதனால் பல இந்துப் பெண்களின் திருமண வாழ்வு பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இன்றைய இளைய தலைமுறையினரிடையே இவ்விடயத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும். அறத்தின் வழியில் பொருளை ஒருவன் தேட வேண்டும் என்பது இந்துக்களின் புருடார்த்தக் கொள்கையாகும்.

சாதி சமயம் கூறாத வழியில் நாம் வாழ வழிவகுப்பது தவறாகும். சீதனக்கலாசாரம் இந்துக்களிடையே பல இடைஞ்சல்களை ஏற்படுத்தி வருகின்றது. இக்கலாசாரம் பிறமதமாற்றத்திற்கு ஆளாகியமையை உணர முடிகின்றது. இந்நிலையில் இக்கலாச்சாரத்தைச் சீர்திருத்த வேண்டியது ஈழத்து இந்துக்களின் பிரதான கடனாகும்.

மனைவிக்குநிகரும் பார்க்க ஆற்றல் மிக்க அமுதமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பல இளையதலைமுறையினரிடையே கணவன் மனைவி உறவில் விரிசல்கள் ஏற்பட்டு நீதி மன்றுகளுக்கு செல்கின்றன. இந்துக்களிடையே புனிதமான இல்லற தர்மம் புரிந்துணர்வோடு பேணப்பட வேண்டியது முக்கியமானதாகும் இன்று இவ் ஒழுக்க நெறி சிதைந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக மேலை நாடுகளில் வசிக்கும் ஈழத்து இந்துக்களிடையே கணவன் மனைவி விவாகரத்துக் கோரும் தொகை அதிகரித்துச் செல்கின்றது. இது மிகவும் ஆபத்தானது. இந்துப் பண்பாட்டிற்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது. எனவே இவற்றைச் சீர்திருத்த அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

இன்று ஈழத்து இந்துக்களின் குடிசனப் பெருக்கம் மிகவும் குறைந்து கொண்டு செல்கின்றது. 1970 களுக்கு முன்பு இருந்த ஈழத்து இந்துக்களின் குடிசனப்பெருக்கம் இன்று மிக மிக மந்த நிலையை அடைந்துள்ளது. இதற்குக் காரணம் எம் நாட்டில் தொடரும் போர்ச்சூழலாகும். அது மட்டுமன்றி ஸ்ரீமாசாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலட்சக்கணக்கான மலையக இந்துத்தமிழர்கள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டமையும், ஈழத்தமிழர் பலர் அகதிகளாக மேலை நாட்டில் குடியேறியமையும் ஈழத்து 'இந்துக்களின் குடிசன வளர்ச்சியைப் பெரிதும் பாதித்துள்ளது. இது மட்டுமன்றி குடும்பக் கட்டுப்பாட்டு முறையை பலர் பின்பற்றுவதனால் இந்துக்களின் தொகை வீழ்ச்சியடைந்து வருகின்றது. இந்துக்கள் இவ்விடயத்தில் மிகுந்த அக்கறையுடன் கருத்திற்கொள்ள வேண்டும். பல இந்துக் குழந்தைகள் போரில் இறந்துள்ளனர். எனவே ஈழத்து இந்துக்களின் சந்ததி விருத்தியை ஊக்குவிப்பதற்கு சகல இந்து நிறுவனங்களும் அக்கறை கொள்ள வேண்டும்.

ஈழத்து இந்துக்களின் திருமணச்சடங்குகள், ருதுசாந்தி வைபவங்கள், அர்த்தமுள்ள சடங்குகளாக அமைதல் வேண்டும். அர்த்தமற்ற ஆடம்பரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலைமாற வேண்டும்.

இந்துக்களின் ஈமக்கிரியைகளில் கூட சில சீர்திருத்தங்கள் இன்று அவசியமாகின்றது. இறந்தவருக்காக எல்லோருமாகப்பிரார்த்திக்கின்ற மரபு இன்று அற்றுப் போய்க்கொண்டிருக்கின்றது. அபரக்கிரியையின் போது பாடப்படுகின்ற திருமுறைகளுக்கு மதிப்புக் கொடுத்து மௌனம் காப்பது கூட இன்று அருகி வருகின்றது.

இறந்தவரது உடலை சிவமெனக் கொண்டு நடைபெறுவது அபரக்கிரியைகள் ஆகும். மிகவும் அமைதியாகவும் இக்கிரியைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் அனுமதிக்க வேண்டும். சில சம்பிரதாயங்கள் என நாம் செய்யும் சில வேடிக்கைகள் பொருத்தமற்றவை. இறந்தவரை மூடிக் கட்டுவதற்கு பந்தலில் கட்டிய கயிற்றை அறுத்து முடித்தல் முறையோ சிலர் அவசரமாகப் பந்தலைத் தலைகீழாக்கி எல்லாம் ஒழுங்கற்றுச் செய்வதாகும். இது போல இடுகாட்டில் இறந்த உடலுக்குப் பெறுமதியான செருப்புக்கள், பட்டுப்பீதாம்பரங்கள், அணிந்து அவற்றை அழிப்பதுவும் பெட்டியோடு பானையை உடைத்து தொட்டியின் மேல் போடுவதும் இன்றைய யுகத்திற்குப் பொருத்தமற்றவையாகும். எனவே மிகவும் பக்தியோடும் அமைதி வழிபாட்டோடும் இத்தகைய நிகழ்வுகளை நடாத்துகின்ற நிலைமை சமூகத்தவரிடையே ஏற்படுத்தப்பட வேண்டும். இதனை ஆதீனங்கள், சைவசமய நிறுவனங்கள், சமயத் தலைவர்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்துக்களின் ஈமக்கடன்கள் நடைபெறும் மயானங்கள் மிகவும் கேவலமாகவே இருப்பது வேதனைக்குரியது. அனைவரும் ஒருநாள் சங்கமிக்கின்ற இடம் மயானம். இதனைப் புனிதமாகப் பேணும் மரபு வளர்க்கப்பட வேண்டும். சமய நிறுவனங்கள் மயானங்களைப் பராமரிக்கும் நிலை ஏற்பட வேண்டும்.

## 2. ஆலயங்களும் சீர்திருத்தப் பணிகளும்

ஈழத்து இந்து ஆலயங்கள் இந்துக்களின் முதன்மை இடங்களாக விளங்குகின்றன. கோயிலில்லாத ஊரில் குடியிருக்கலாகாது என்று கூறியிருக்கின்ற இந்துக்கள் கோயிலை மையமாகக் கொண்டே தம் வாழ்வியல்களை அமைத்துக் கொண்டனர். இந்துக்களின் வாழ்வில் முதன்மை பெறும் ஆலயங்களில் ஏற்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்தங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

---

### நெஞ்சில், ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்

'' முருகா! .. என்று தினமும் துதிக்கும் அன்பர்களுக்கு அச்சம் இல்லை, பகைவருடைய போராட்டம் இல்லை, எப்போதும் முருகன் இருவடித்துணை உண்டு. முருகன் கைவேல் எம்மை வினையில் இருந்தும் காக்கும். இதனை 'திருமுருகாற்றுப்படையில்' நக்கீரர் பின்வருமாறு குறிப்பிடுவார்.

'' அஞ்சு முகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன் ''

---

பொறுமையிலும் உயர்ந்த தவமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருவே துணை

# இன்று போல் என்றும்...

''செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
தாற்றின் அடக்கப் பெறின்''

அறியவேண்டிய வகைகளை அறிந்து ஒருவன் அடங்கி நடந்தால், அவனுடைய அடக்கம் பிறரால் மதிக்கப்பட்டு அவனுக்குச் சிறப்பைத்தரும் என்ற, வள்ளுவர் வாக்குக்கமைவாக வீறுநடை போடுபவர் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின் அதிபராகவும், எமது சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் செயலாளராகவும் பணியாற்றிக் கொண்டிருக்கும் திரு. நடராசா அரியரத்தினம் அவர்கள்.

எமது ஆச்சிரமத்தினால் நடாத்திவரும் ஆன்மீகப் பணிகளென்றாலும் சரி, சமுதாயப்பணிகளென்றாலும் சரி எம்மால் முன் வைக்கப்படும் செயற்பாட்டின் ஆலோசனைகளைச் சீர்தூக்கிப் பார்த்து அதற்குரிய வழி வகைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பல வகைகளிலும் ஊன்று கோலாக செயலாற்றி வருவதில் அவருக்கு நிகர் அவரே.

அத்துடன் எமது பேரவை வெளியீடாகிய ஞானச்சுடர் சஞ்சிகை பலவித இடர்பாடுகளின் மத்தியிலும் ஐந்தாம் ஆண்டில் காலடி வைப்பதற்கும் அவரது எழுத்தாற்றலும் ஒரு காரணம். அந்த வகையிலும் நாம் அவரைப் பாராட்டக்கடமைப்பட்டுள்ளோம்.

கனம் அதிபர் அவர்கள் தரம் I ற்குப் பதவி உயர்வு பெற்றமையையும், யாழ் பல்கலைக்கழகத்தினால் ''கல்வி முதுமாணிப்பட்டம்'' பெற்றதையிட்டும், அவர் ஆற்றும் சகல பணிகளும் மேன் மேலும் சிறந்து விளங்கவும் சந்நிதியானை வேண்டுதல் செய்து நிறைவு செய்கின்றோம்.

சுபம், சாந்தி

குருபணியில்
செ. மோகனதாஸ்

துணிவுடன் துணையும் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நாவலர் பெருமான் கூறிய

## விரத முறையாவது.....

( மகேந்திரன் நிரஞ்சனா )

மனம் பொறிவழிப் போகாது நிற்றற்பொருட்டு, உணவை விடுத்தேனும் - சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை விதிப்படி பூசித்து மெய்யன்போடு விசேடமாக வழிபாடல் இதுவே. சைவ மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறையாகும் என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கூற்று. ஆனால், இன்று நம் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற விரத முறையானது வேறாக உள்ளது.

இறந்தனை மனம், பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டுத்தான் விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதாவது நம் உடல் பொறிவழியான மெய், வாய், கண், மூக்கு, செவி இவற்றின் வழி மனம் தறிகெட்டு அலைவதை - அந்தப்படி, அறநெறி முறைக்கு மாறான - விரும்பத்தகாத தீய செயல்களைச் செய்யாது, கூறாது, பார்க்காது, முகராது, கேட்காது அதிலிருந்து ஒதுங்கி, அதை அறவே ஒதுக்கி - மனம், சொல், செயல் (காயம் - உடம்பு) ஆகிய மூன்றினாலும் இறைவனை விதிப்படி பூசித்து (இங்கு விதிப்படி என்பது) நாம் நீராடி, தூய ஆடை அணிந்து, கோவிலுக்குச் சென்று அல்லது வீட்டில் இருந்து பூசைப் பொருட்கள், திவ்ய நாமம் ஆண்டவனுக்குப் படைத்து கற்பூர, தூப, தீபங்கள் காட்டி, தேவார திருவாசகங்களைப் பிழையின்றி செம்மையான சுருதியோட்டுடன் பக்தி பரவசமாக மெய்யன்போடு பாடி " எல்லோரும் நலமாக வாழ அருளும் ஆண்டவனே " என்று வழிபடுவதுதான் நாவலர் பெருமான் கூறிய ஒழுங்கான விரத முறையாகும்.

மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை விதிப்படி பூசித்து வரும் போது, நீராடி உடலைத் தூய்மைப்படுத்துவது போல மனம், வாக்கு இரண்டையும், மனத்தில் உள்ள அழுக்குகளான பொறாமை, வஞ்சகம், சூது, கபடம், நன்றி

ஆசை உள்ள இடத்தில் அமைதி இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டதனம் இவற்றை அகற்றித் தூய்மைப்படுத்தி நல்ல எண்ணங்களால் அன்பு, அறம், அருள், ஈகை, பெருந்தன்மை இவற்றால் மனத்தை நிரப்பிக்கொள்ளல் வேண்டும். மனத்தில் நல்ல எண்ணங்கள் - சிந்தனைகள் நிரம்பி இருந்தால் வாக்கும் பிறருக்குத்தீங்கு நினைக்காத மனத்தைப் புண்படுத்தாத நலம் தரும் இனிய சொல்லாக அமையும்.

புதுவருடம் 2002 பிறந்து விட்டது இனி எம் முழுமுதற் கடவுளாம் சிவனின் மகா சிவராத்திரி விரத தினத்தோடு விரதங்கள் யாவும் ஆரம்பமாகும். இனியாவது நம் சைவ மக்கள் சைவச் சான்றோர் பகர்ந்த உண்மையான அறவழி நின்று விரதங்களை அநுட்டித்துச் சுபீட்சமாக வாழ வேண்டும்! நான் மட்டும் என்று சிந்திக்காமல் '' எல்லோரும் நலமாக வாழ வேண்டும் '' என்று சிந்தித்தால் அந்த எல்லோரிற்குள்ளும் நானும் ஒருவன் என்ற உண்மையை உணர முடியும் என்பது திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் அருள் வாக்கு. ஊன் உடம்பு - ஆலயம், வாய் - கோபுர வாசல், தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் - சிவலிங்கம் என்ற திருமூலர் திருமந்திரத்தின் உண்மையை உய்த்து உணர்க.

சுபம்.

---

## அழிவில்லை

உடைந்து போன ஒரு மண் பானையின் கழுத்து பூமியில் கிடந்தது வழிப்போக்கன் ஒருவன் அதைக்கவனிக்காமல் மிதிக்கப் போனான்.

'' மிதிக்காதே, மிதிக்காதே நான் ஒரு பானையின் கழுத்து '' என்று சத்தம் போட்டது அது.

வழிப்போக்கன் சிரித்து விட்டு '' இனி உனக்கென்ன வாழ்வு? உன்னை மிதித்தாலென்ன, உடைத்தாலென்ன? நீ இப்பொழுது பானையல்ல உடைந்து போன அதன் கழுத்து ''

கழுத்து இதனைக்கேட்டு சிரித்து விட்டு '' முன்பு நான் பானை இப்பொழுது கழுத்து, நாளை மீண்டும் களிமண். பிறகு ஒரு புதிய பானை; ஆனால் நீ - ? ''

வழிப்போக்கன் யோசித்தான். அதைத்தொட்டுக் கும்பிட்டு விட்டுத் தன் வழியே போனான்.

---

ஒருவரின் பேச்சிலிருந்து உளப்பண்பை அறியலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சந்நிதியான்

> ந. அரியரத்தினம் <



ஆறுமுகம் பரிகாரியார் இரண்டு சந்ததிக்கு முற்பட்ட ஒரு வைத்தியர். அவரின் மகன் விசாரத்தினமும் வைத்தியத் தொழிலையே மேற்கொண்டுவந்தார். ஆனால் அவரை விசாரத்தினம் "டொக்டர்" என்றே எல்லோரும் அழைத்தனர்.

வைத்தியர் என்ற சொல் வழக்கிழந்து வருகின்ற தன்மையை இன்று காண்கின்றோம். பொதுவாக எந்த சுதேச வைத்தியரும் நவீன வைத்திய முறைகளையோ அல்லது நவீன மருந்துகளையோ சிறிதளவேனும் தமது சுதேச வைத்தியத்துறையிலும் பயன்படுத்திவருகின்ற தன்மைகளாலோ, அல்லது வேற்றுமொழிச் சொற்கள் இயல்பாக எமது மொழியில் பயன்படுத்தப்பட்டுவருகின்ற தன்மைகளாலோ இன்று வைத்தியம் பார்க்கின்றவர்களை டொக்டர் என்றே அழைப்பதும் வழக்கமாகிவிட்டது.

முதுமைக்கு வேண்டியதை இளமையில் தேடிக்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்கு 35 வருடங்களுக்கு முன்பு ஆறுமுகம் பரியாரி யாரின் மகன் விசாகரத்தினம் டொக்டர் தனது பரம்பரைத் தொழி லான வைத்தியத் தொழிலை தொண்டைமானாற்றுச் சந்தியின் தெற்குப்புறமாக உள்ளகட்டிடத்தில் ( இன்று இடிந்த நிலையில் உள்ளது ) மேற்கொண்டு வந்தார். தற்பொழுது லண்டனில் வாழ்ந்து கொண்டிருக்கிறார், இவர் தந்தையின் வழியில் வைத்தியத்தொழிலை மேற்கொண்டுவந்த காலத்தில் மக்களால் மதிக்கப்படும் ஒருவராக மட்டுமன்றி பல்வேறு ஆற்றல்கள் நிறைந்த ஒருவராகவும் விளங்கி னார். சமூகசேவை, சமூகசீர்திருத்தம், நாடகம், அரசியல் என பல துறைகளிலும் ஈடுபாடு உள்ளவராகவும் விளங்கினார்.

நாடகத்தில் நடிக்கின்ற பொழுது விகடமாகப் பேசி மக்கள் மனதில் இடம்பிடித்த ஒருவராகக் காணப்பட்டார் ஒருமுறை வைத் தியராக நகைச்சுவைப் பாத்திரத்தில் நடித்த பொழுது பின்வரும் வரிகளை விகடமாகப்பாடி தனது பாத்திரத்தை வழமை போல நிறைவுடையதாக்கினார் என அவரது நண்பர் ஒருவர் குறிப் பிட்டார்.

தலையிடி காச்சல் வந்தால்
தயவுடன் மருந்தைக் கேளும்
மலை தனில் இருக்கும் கல்லை
வண்டில் கொண்டு ஏற்றிவந்து
தலைதனை கீழே வைத்து
கல் அதைமேலே போட்டால்
தலைஇடி காச்சல் எல்லாம்
தவிடு பொடி ஆகும் தானே.

அரசியற்துறையிலும் இவர் முற்போக்கானவராகவும் தமிழ் நாட்டில் அக்காலத்தில் செல்வாக்குப் பெற்று வந்த தி. மு. க. கட் சியின் கொள்கைகள், அறிஞர் அண்ணா போன்றவர்களின் பாங்கில் பேசுகின்ற தன்மைகள் போன்றவற்றை இங்கேயும் மேற்கொள் ளும் முயற்சியிலும் ஈடுபட்டார். மேடைகளில் பேசுகின்றபொழுது பின்வருமாறு அவர் கூறுவதுண்டு

'' நாங்கள் வெல்வதற்காக வரவில்லை
சொல்வதற்காக வந்துள்ளோம் ''

இதே போன்று தாழ்த்தப்பட்டோரின் ஆலயப்பிரவேசம் போன்ற செயற்பாடுகளிலும் பங்களிப்புச்செய்து வந்தார். அத்துடன் புராதன

அறிவும் அறியாமையும் சேர்ந்ததே மனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டிச்சாவடிகளைப் பெறுதல் பரம்பரை வைத்திய முறைகளில் சிறுப்பிட்டி மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் போன்ற செயற்பாடு களையும் செய்துவந்தார்.

மூன்று தசாப்தங்களுக்கு முற்பட்ட காலத்தில் சமூகத்திலும் இவ்வாறான தன்மைகள் காணப்பட்டதை அக்காலத்தில் வாழ்ந்த வர்கள் நன்கு அறிவர். அந்த வேளை தமிழர்களை அரசாங்க உத்தியோகம் என்ற வகையில் ஏனைய தொழில்களைப் போன்று முப்படைகளிலும் சேர்ந்து உயர் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொண்டிருந்தனர். இந்த வகையில் விசாகரத்தினம் டொக்டரும் தனது மகனைக் கடற்படைக்கு சேர்ப்பதற்காக விண்ணப்பித்து அதில் அவர் தெரிவு செய்யப்பட்டதனால் அதற்கான பயிற்சி அவருக்கு வழங் கப்பட்டுக் கொண்டிருந்தது. அக்காலத்தில் வடக்குக்கிழக்குப் பகுதி களிலும் கடற்படையினர் சுதந்திரமாகச் செயற்பட்டு வந்ததினால் காங்கேசன்துறைப் பகுதியிலேயே இளைஞருக்கு பயிற்சி வழங்கப்பட் டது.

இவ்வாறான கடற்படைப் பயிற்சியின் பொழுது விசாகரத்தி னத்தின் மகன் காணாமல் போனது பற்றிய தகவல் வீட்டிற்கு கிடைத்தது. காணாமல் போனவரைக் கண்டுபிடிப்பதற்காக கடற் படையினர் மட்டுமன்றி விமானப்படை மற்றும் தரைப்படையினர் எல்லோரும் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனாலும் அவர் களின் முயற்சி பயனளிக்கவில்லை.

தேடும் முயற்சி தொடர்ந்து நடைபெற்றாலும் பயிற்சியில் ஈடு பட்டவர் கிடைப்பார் என்ற நம்பிக்கை சுவருக்கும் படிப்படியாக குறைய ஆரம்பித்தது. இறுதியாக தேடும் முயற்சி படிப்படியாகக் கைவிடப்பட்டு அவர் இறந்திருக்க வேண்டுமென்பது உறுதியாகிவிட் டது.

இந்நிலையில் விசாகரத்தினம் டொக்டரின் நடையும் உள்ள மும் தடுமாற ஆரம்பித்தது. தனது மகனின் இழப்பைத் தாங்க முடியாதவரான அவர் பைத்தியம் பிடித்தவர் போல வீட்டிலிருந்து ஓட ஆரம்பித்தார். அவர் எங்கே ஓடுகின்றார் என்பது எவருக்கும் விளங்கவில்லை. அவரைப் பின் தொடர்ந்து அவரது மனைவியும் ஓடி னார். இவ்வாறு ஓடிவந்த விசாகரத்தினம் டொக்டர் சந்நிதியா னின் ஆலயமானக் கடந்து இன்று நாம் இருக்கும் இடத்தையும் தாண்டிச்சென்று சந்நிதியானின் வாசலில் மடக்குத்தெற்காக அட் டாங்கமாக விழுந்து உடலும் உள்ளமும் பதைபதைக்க வாய்விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறி அழுது தனது மகனைக் காப்பாற்றும்படி சந்நிதியானிடம் வேண்டுதல் செய்தார்.

மடைப்பள்ளிக்குள் அமுது செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆலயப்பூசகர்கள் அவர் தொப்பென விழுந்து கதறி அழுகின்ற சத்தத்தைக்கேட்டு வெளியேவந்து நடக்கின்ற சம்பவத்தை வியப்புடன் நோக்கினார்கள்.

ஆம்! ஆலயப்பகுதியில் காணப்படாத ஒருவர் சந்நிதியானை வணங்காத ஒருவர் கோயிலுக்கு போகாத கொம்யூனிஸ்டுக்கள் என்று அழைக்கப்படுபவர்களில் ஒருவராக உள்ள விசாகரத்தினம் டொக்டர் அங்கே காணப்பட்டதும், அவரின் பரிதாபமான நிலையும் உண்மையில் அவர்களின் உள்ளத்தைத் தொடுகின்ற காட்சியாகவே இருந்தது.

பூசகர்கள் மட்டுமன்றி ஊரவர்கள் கூட விசாகரத்தினம் டொக்டருடைய நிலமைக்காகப் பரிதாபப்பட்டனர் அவரது மகன் காணாமற் போனதற்காக எல்லோரும் பரிதாபப்பட்டாலும் சிலர் பின்வருமாறும் கூறிக்கொண்டனர்.

''இறைவன் ஒருவன் இருப்பதையே ஏற்றுக் கொள்ளாத டொக்டர் தனக்கு துன்பம் வந்தவுடன் ஆலயத்தை நாடி வந்துள்ளார் இவர்களை சந்நிதியான் எவ்வாறு ஏற்றுக்கொள்வான். சரி அவரை ஏற்றுக்கொண்டாலும் காணாமல்போன அவரது மகன் கிடைத்து விடவா போகின்றான்.''

இவ்வாறு மகன் காணமற்போன துயரம் ஒருபுறம் மற்றவர்களுடைய அவப்பெயர் மறுபுறமுமாக வேதனைத்தீயினுள் சிக்கித் தவித்த விசாகரத்தினம் அவர்கள் தனது இவ்வாறான பரிதாப நிலைக்காக இரங்க மாட்டாயா என சந்நிதிவேலவனிடம் சரணாகதி அடைந்து தனது மகனை மீட்டுத்தருமாறு சந்நிதியானுடைய நாமங்களை இடைவிடாது உச்சரிக்கலானார்.

ஆம்! விசாகரத்தினம் டொக்டரின் வேண்டுதல் சந்நிதியானின் உள்ளத்தைத் தொட்டது. கருணைக்கடலான சந்நிதியானின் கடைக்கண்பார்வை இவரின் மேல் திரும்பியது காணாமல்போய் மயக்கநிலையில் கரையில் ஒரு மூலையில் ஒதுங்கிக்கிடந்த அவரது மகன் தற்பொழுது கடற்படையினரின் கண்களுக்குத் தென்பட்டார். அவர்உயிர் பிழைத்த செய்தி வீட்டை நாடிவந்தது.

பண்பில்லாத இடத்தில் சுதந்திரம் இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுகக்கந்தனான சந்நிதிவேலவனின் கருணையின் ஆழத்தை அளவிட முடியாத விசாகரத்தினம் அவர்கள் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றவராய் தனது உணர்வலைகளை எவ்வாறு வெளிக்காட்டுவது எனத் தெரியாது தத்தளித்தார்.

இறுதியில் தனக்குள் முடிவு எடுத்தவராய் நடந்து முடிந்த அற்புத நிகழ்வை பெரிய அளவில் அச்சிட்டு தொண்டைமானாறு சந்நிதியில் வைத்து அந்தப் பாதையால் சென்று வருகின்ற வாகனங்கள் உட்பட அனைவருக்கும் விநியோகித்து இன்று ஞானச்சுடர் செய்வது போன்ற ஒரு செயலை அன்று செய்ய முற்பட்டுள்ளார். அவர் அச்சிட்ட பிரசுரத்தில் பின்வரும் வரிகள் பெரிதாக அச்சிடப் பட்டிருந்தன.

> அரசாங்கத்தின் காட்டுப்படை, தரைப்படை, விமானப்படை என்பவை தேடிக் கண்டுபிடிக்க முடியாது தனது மகனை சந்நிதி வேலவனின் வேற்படை தான் இறுதியில் கண்டுபிடித்தது

ஆம்! வேலாயுத வடிவில் மூலஸ்தானத்தில் வீற்றிருந்து தன்னை நாடிவருகின்ற அடியார்களை அரவணைத்து அவர்களது துன்பத்தைப் போக்குகின்ற சந்நிதிவேலவனது அருளிற்கு எல்லைதான் உண்டோ அல்லது அதனை அளவிடத்தான் எம்மால் முடியுமா?

ஓம் முருகா!

## முழுமையான மனிதன்

ஒவ்வொரு குடும்பத்திலும் நான்கு வடிவங்களில் இறைவனை நாம் காணமுடியும். நம்மை வளர்த்து ஆளாக்கி நமக்காக எல்லாத் தியாகங்களையும் செய்த தாய் முதல் தெய்வம். நம்மைக் காத்து வளர்த்து எல்லா வசதிகளையும் அளித்து உருவாக்கிய தந்தை இரண்டாவது தெய்வம். நமது அறியாமையைப் போக்கி ஞானத்தை வளர்க்கும் குரு மூன்றாவது தெய்வம். நாம் எதிர் பாராமலே வந்து நம்மிடம் உணவும் உபசாரமும் கேட்கும் விருந்தாளி நமக்கு அன்னதானம் செய்த நற்பலனை அளிக்கும் நான்காவது தெய்வம். இந்த நால்வரையும் மதித்துப் போற்றி வாழ்பவனே முழுமையான மனிதனாகிறான்.

காரியத்தில் உறுதியாக இருப்பதுதான் வெற்றியின் ரகசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நித்திய அன்னப்பணிக்கு உதவியோர் (தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| 65) | மாசிலாமணி குகன் ஞாபகார்த்தமாக K. V. சிவநேசன் கொக்குவில் | 2000 00 |
| 66) | மா. தங்கவேல் பலாலி 1 மூடை அரிசி | 2000 ... |
| 67) | திருமதி தங்கமுத்து கந்தையா தம்பசிட்டி | 2000 ... |
| 68) | மு. ராஜ்குமார் சி. முத்துக்குமாரசாமி | 500 ... |
| 69) | நா. குகன் குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை | 1000 ... |
| 70) | P. T. பாலச்சந்திரன் ( வல்வை ) அவுஸ்திரேலியா | 4000 |
| 71) | ஹேமலதா செல்வராசா குழந்தைகள் சிறுவர் நிலையம், மானிப்பாய் | 500 |
| 72) | கணேஸ்மூலம் அருளானந்தம் குடும்பம் வெள்ளவத்தை | 5000 ... |
| 73) | சாரங்கா நகைமாடம் யாழ்ப்பாணம் | 2 மூடை அரிசி |
| 74) | யோகு றேடிங் யாழ்ப்பாணம் | 2 மூடை அரிசி |
| 75) | க. கணேசலிங்கம் யாழ்ப்பாணம் | 1 மூடை அரிசி |
| 76) | தி. மகேஸ்வரன் மகாலெட்சுமி களஞ்சியம் | 3 மூடை பருப்பு 750 தேங்காய் |
| 77) | முத்துமாரி ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம் | 1 மூடை அரிசி |
| 78) | செந்திவேலாயுதம் துஷ்யந்தன் உடுப்பிட்டி | 1000 00 |
| 79) | சம்பந்தர் கொழும்பு | 1000 |
| 80) | க. நிமலசாந்தன் அச்சுவேலி | 5000 |
| 81) | இ. இரத்தினசோதி வல்வெட்டி | 1000 ... |
| 82) | முருகவேள் வட்டுக்கோட்டை | 250 |
| 83) | Dr. ஸ்ரீலோகராசா பிரதான வீதி, பருத்தித்துறை 1 மூடை அரிசி | 500 ... |
| 84) | வே, பாண்டியர் கைதடி மேற்கு | 500 ... |
| 85) | மு. பஞ்சலிங்கம் உரும்பராய் | 1000 ... |
| 86) | ம. ஸ்ரீதரன் ( லண்டன் ) வல்வெட்டித்துறை | 10000 ... |
| 87) | ந. கந்தசாமி உடப்பு | 500 ... |
| 88) | வைரமுத்து குடும்பம் கந்தர்மடம் | 500 ... |
| 89) | தி. துவாரகேஸ்வரன் ஈஸ்வரன் றேடஸ் யாழ்ப்பாணம் 2 மூடை அரிசி | 500 ... |
| 90) | மணிதரன் வல்லிபுரம் | 1 மூடை அரிசி |
| 91) | ஜெயபாலசிங்கம் கரவெட்டி | 1 மூடை அரிசி |
| 92) | சிவானந்தராசா ( குட்டி ) | 1 மூடை அரிசி |
| 93) | நக்கீரன் துன்னாலை | 1 மூடை அரிசி |
| 94) | ஜெகா மோட்டோர்ஸ் நெல்லியடி | 1 மூடை அரிசி |
| 95) | நவம் வறணி | 1 மூடை அரிசி |

[தொடரும் ..]



PUBLIC LIBRARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத வாராந்த நிகழ்வுகள்

05 - 04 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- செல்வன் T. தயாபரன்

சொற்பொழிவு: " அடியார்க்கு அடியன் "

வழங்குபவர் :- செல்வன் N. சந்திரசேகரம்

( இரா. செல்வவடிவேல் ஆசிரியரின் மாணவர்கள் )

---

12 - 04 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- இரா. ஸ்ரீநடராசா ( ஆசிரியர் )

விடயம் :- " பக்திப் பாடல் "

வழங்குபவர்கள் :- இளையநிலா இசைக்குழுவினர் ( உடுப்பிட்டி )

---

19 - 04 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- திரு. பொ. அருந்தவநாதன்

( விரிவுரையாளர் யாழ். கல்லூரி வட்டுக்கோட்டை )

சொற்பொழிவு :- " பகவத்கீதை " ( தொடர் )

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல்

( விரிவுரையாளர் யாழ். கல்லூரி. வட்டுக்கோட்டை )

---

26 - 04 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# சித்திரை - 2002

வெளியீட்டுரை : திரு. நா. மகேந்திரன்

( உதவி திட்டமிடல்ப்பணிப்பாளர் பருத்தித்துறை )

மதிப்பீட்டுரை :- திரு. செ. ஸ்ரீனிவாசன்

( பிரதேச செயலர், கரவெட்டி )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 2002 ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அதுபற்றிய முடிவுகள் 2003 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க் குழு:
**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org